பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

செல்லையா
சிவபாதலிங்கம்
தங்க வைர
நகை வியாபாரம்
218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி 23794
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

# உதயன்

விலை ரூபா 3/50

Selliah
Sivapathalingam
GEM
&
JEWELS
MERCHAN!
218H, Kasthuriar Road
Jaffna.
T. Phone: 23794

சுடர்: 5 சுக்கில ஞூ மாசி மீ 13 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 28 (25-02-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 18

# முழு அதிகாரப் பரவலாக்கல்; இல்லையேல் ஈழப் பிரகடனம்!

## மக்களின் முன் விரைவில் 'பிரபா'

### தோன்றுவார் எனகிறார் மாத்தயா

கொழும்பு, பெப். 25
தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தளபதி திரு. வே. பிரபாகரன் மிக விரைவில் மக்கள் மத்தியில் தோன்றுவார்.

—இப்படி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மாத்தயா பி. பி. சி செய்தியாளரிடம் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டால் இதர போராளி அமைப்புக்

( 5ஆம் பக்கம் பார்க்க)

## கலைஞரிடம் ஈ. பி. ஆர். எல். எவ். குழு சமர்ப்பிக்கும் யோசனை இதுதான்!

கொழும்பு, பெப்ரவரி, 25

வடக்கு—கிழக்கு மாகாணசபைக்கு முழு அளவில் — அதாவது குறிப்பிடப்பட்ட 16 விடயங்களில் — இலங்கை அரசு அதிகாரத்தை பரவலாக்கி வழங்கவேண்டும். அதனைத் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இந்திய மத்திய அரசு மூலம் உறுதி செய்யவேண்டும்

அப்படி அதிகாரம் பரவலாக்கப்பட்டால் வடக்கு, கிழக்கு மாகாணசபையில் எம்மிடம் இருக்கும் 38 ஆசனங்களையும் இராஜினாமாச் செய்து கலைஞர் கருணாநிதி தீர்மானிக்கும் ஏதேனும் ஒரு குழுவினர் அப்பதவிகளை பொறுப்பேற்க வழிவிடுவோம்.

ஆனால் அதிகாரத்தை கலைஞராலும் இந்திய அரசினாலும் பெற்றுத்தர முடியாவிட்டால் ''சுதந்திர தமிழ் ஈழ'' பிரகடன த்துககு கலைஞரும் மத்திய அரசும் முழு அளவில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கலைஞர் கருணாநிதியிடம் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் சமர்ப்பிக்கும் புதிய யோசனை இதுதான்!

ஈ. பி. ஆர். எல். எவ்வின் புதிய யோசனைகளை, ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சித்து வரும் கலைஞர் மு. கருணாநிதியிடம் ஒப்படைத்து அது குறித்து அவருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அந்த இயக்கத்தின் தூதுக்குழு ஒன்று நேற்று கொழும்பிலிருந்து சென்னை பயணமானது.

இந்தக் குழுவிற்கு வடக்கு, கிழக்கு மாகாணசபையின் அமைச்சர் ஜனாப் அபு யூசுப் தலைமை வகிக்கிறார். அவருடன் தூதுக்குழுவில் இடம் பெறும் ஏனைய உறுப்பினர்களான வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தலைவர் திரு. சாம் இராஜகாரியர், மாகாணசபை உறுப்பினர்கள் திரு. கந்தசாமி, திருமதி ஸ்ரீதரன் ஆகியோர் நேற்று

(5-ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி - புலிகள் தூதுக்குழு சந்திப்பு



விடுதலைப்புலிகள் தூதுக்குழு கடந்த வியாழன் இரவு கொழும்பில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம். ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா, விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா (மாத்தயா), செயலாளர் நாயகம் திரு யோகரட்ணம் யோகி, டாக்டர். அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர். (மற்றொரு படம் 7 ஆம் பக்கத்தில்).

## கார் விபத்தில் சிக்கிய ஜெயலலிதா ஆஸ்பத்திரியில்!

சென்னை, பெப் 25
அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா பயணம் செய்த கார் நேற்று அதிகாலை மீனம்பாக்கம் விமான நிலையம் அருகே விபத்துக்குள்ளானது.

செல்வி ஜெயலலிதா, அவரது உதவியாளர், கார் சாரதி ஆகியோர் காயமடைந்தனர். பின்னர் அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்

அவர்கள் அனைவரின் உடல் நிலைக்கு ஆபத்து இல்லை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

25 — 02 — 1990
ஞாயிற்றுக்கிழமை மாசி 13
சுபநேரம்:
9 . 30 முதல் 11. 00 வரை
ராகுகாலம்:
5 . 00 முதல் 6 . 30 வரை
அமாவாசை விரதம்
இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்.

## முச்சந்தி முரளி



நடமாடும் சேவை யாழ். நகரிலையும் நடமாடினால் நல்லது கண்டியளோ . . . !

## கொழும்பில் விரைவில் நடமாடும் மலசலகூடம்!

கொழும்பு, பெப் 25
நடமாடும் மலசல கூடங்களை அமைக்க கொழும்பு மாநகரசபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

பொது மலசல கூடங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யு முகமாக நடமாடும் மலசல கூடங்களை ஜப்பானில் இருந்து தருவிக்க கொழும்பு மாநகரசபை கேள்விப்பத்திரங்களை கோரியுள்ளது.

கோட்டை, புறக்கோட்டை மற்றும் காலிமுகத்திடல் ஆகிய பகுதிகளில் காலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை இந்த நடமாடும் மலசல கூடங்கள் வைக்கப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு நடமாடும் மலசல கூடத்திலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் என்று தனித்தனியாக இரண்டு அறைகள் இருக்கும்.

ஒவ்வொரு மலசல கூடமும் 800 கிலோ எடை கொண்டதாக இருக்கும்.

இலகுவாக கழுவுவதற்கு ஏதுவாக துருப்பிடிக்காத உலோகத்தினால் இவை அமைக்கப்பட்டிருக்கும்.

## பாலைதீவு, கச்சதீவு உற்சவங்கள் நடைபெறா

குருநகர், பெப். 25
பிரசித்திபெற்ற யாத்திரைத்தலமான பாலைதீவு புனித அந்தோனியார் திருநாள் இம்முறை நடைபெற மாட்டாது. இத்தகவலை யாழ் ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தெரிவித்தார்.

அதேபோன்று கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருநாளும் இம்முறை நடக்காதென்று அவர் மேலும் தெரிவித்தார்.

மார்ச்மாதம் முதல்வாரம் பாலைதீவு ஆலயத் திருநாளும் இரண்டாம் வாரம் கச்சதீவு ஆலயத் திருநாளும் நடைபெறவேண்டிய காலங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## கச்சதீவில் கடற்படை முகாம் அமைக்க இலங்கை முயற்சி?

இராமேஸ்வரம், பெப். 24
இலங்கைக் கடற்படையின் முக்கிய உயர் அதிகாரிகள் படகு மூலம் கச்சதீவுக்குக் கடந்த வியாழக்கிழமை சென்றனர்.

கச்சதீவில் உள்ள பல பகுதிகளையும் அவர்கள் நேரில் பார்வையிட்டதோடு, கச்சதீவில் இலங்கைக் கடற்படை முகாம் ஒன்றை அமைக்க நடவடிக்கைகளையும் எடுத்தனர் என்று இராமேஸ்வரம் செய்திகள் தெரிவித்தன.

கச்சதீவை இலங்கை கடற்படை அதிகாரிகள் பார்வை இட்டபோது, கச்சதீவில் உள்ள சிறிய காட்டில் தமிழ்ப் போராளிகள் இயக்கம் ஒன்றின் கொடி பறப்பதையும் சில போராளிகள் தங்கியிருப்பதையும் கண்டனர் என்றும் அச்செய்தி தெரிவித்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## விபத்தில் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப் 25
நேற்று அதிகாலை 3 மணி அளவில் திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கு அருகில் இடம் பெற்ற பஸ் விபத்தில் இருவர் படுகாயமுற்றனர். மேலும் சிலர் காயமுற்றனர். [உ-9]

## சார்க் மாநாடு ஏப்ரலில் கொழும்பில் நடைபெறும்

சார்க் உச்சிமாநாடு எதிர் வரும் ஏப்ரல் நடுப் பகுதியில் கொழும்பில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுவதாக கொழும்பில் அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

சார்க் அமைப்புக்கு தற்போது தலைமை வகிக்கும் பாகிஸ்தானிடம் இருந்து மாநாட்டுக்கான திகதிகள் பற்றிய அறிவித்தல் கிடைக்காவிடினும் மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் அரசு ஏடுபட்டு வருவதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ-எ)

## 78 மாணவர்கள் சரண்!

கொழும்பு, பெப் 25
மாத்தறைப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் ஜே. வி. பியுடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப்படும் சுமார் 78 மாணவ மாணவிகள் அப்பகுதி இராணுவத் தளபதியிடம் சரணடைந்தனர் என்றும்—

பின்னர் இவர்கள் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

(உ-எ)

## வடமராட்சியிலிருந்து இந்தியபடை முற்றாகவாபஸ்

பருத்தித்துறை, பெப். 25
வடமராட்சிப் பகுதிகளில் இருந்து இந்தியப்படையினர் முற்றாக வாபஸ் பெற்றுவிட்டனர்.

வடமராட்சியில் இருந்து படையினர் கடந்த சில தினங்களாகக் கட்டம் கட்டமாக வெளியேறி வந்தனர்.

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## வில்பத்து காட்டுப் பகுதியில் யாழ். பஸ்மீது சூடு!

யாழ்ப்பாணம், பெப், 25
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த தனியார் சொகுசு பஸ் ஒன்றின் மீது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ராஜாங்கணைக்கும் வில்பத்துவிற்கும் இடையில் காட்டுப்பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

துப்பாக்கிப் பிரயோகம் நடந்த இடத்தில் பஸ் நிறுத்தப்படவில்லை. சாரதி பஸ்ஸை நொச்சியாகம பொலீஸ் நிலையம் வரை கொண்டுவந்துஅங்கு நிறுத்தினார்.

பஸ் நிறுத்தப்பட்ட பின்னர் பார்த்தபோது பஸ்ஸில் பயணம்செய்த இளம் பெண்

[5 ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books) அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer Books) கதைப்புத்தகங்கள், சபாப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்துமடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்று கொள்ளலாம். (மண்டேலா ரேடர்புத்தகசாலை) இல: 02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம் (1551)

புத்தம் புதிய Eastern Bicycle விற்பனைக்கு உண்டு. எல்லா உபகரணங்களுடன் தொடர்பு கொள்க. S. Pavendra 47, Temple Road, Jaffna. (2613)

ஸ்கூட்டர் (வெஸ்பா-8 ஸ்ரீ 957) விற்பனைக்கு உள்ளது. விலை 12500/- நேரில் தொடர்பு கொள்ளவும். 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. (11847)

புங்குடுதீவு 3ஆம் வட்டாரம் சர்வோதய ஸ்தாபனம் பின் பக்கமாக 10 பரப்பு நன்னீர் காணி (கல்யாணத் தோட்டம்) உடன் விற்பனைக்குண்டு. கோவில்கள் பாடசாலைகள் அருகாமையில் உண்டு. தொடர்பு கொள்ளவும். திருமதி நாகம்மா நாகநாதி, ஆஸ்பத்திரி வீதி, புங்குடுதீவு-2 (2630)

Bajaj Chebak ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு Dr. K. பாலகிருஷ்ணன் 189, இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (2619)

## வாங்கலாம் விற்கலாம்

பழைய புத்தகங்கள் வாங்கப்படும், விற்கப்படும். Second Hand Book House, 13, ஸ்ரான்லி வீதி, (முரசொலி, இலங்கை வங்கிக்கு முன் வைத்தியலிங்கம் மரக்காலை லேன்) யாழ்ப்பாணம். (2633)

## தேவை

யாழ் போதனா வைத்திய சாலைக்கு அண்மையில் தனியார் நிறுவனம் ஒன்றின் கட்டிட அலுவலகம் (Building Construction Office) ஒன்று அமைப்பதற்கு ஒரு வீடு உடன் தேவைப்படுகிறது. No—626 C/o உதயன் (2609)

யாழ் நகரில் இயங்கிவரும் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு மேற்பார்வையாளர்களும் பிறேசியர் (Brassiers) வெட்டுவதிலும் தைப்பதிலும் அனுபவம் வாய்ந்த பெண் தொழிலாளர்களும் தேவை. மிகவும் அனுபவம் உடையவர்களுக்கு தகுதியான சம்பளம் வழங்கப்படும். 5-3-90 க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும். No. 627, C/o உதயன். (2616)

விறகு கொத்துவதற்கு உடனடியாக ஆட்கள்தேவை. ஒரு நாளைக்கு 100/- முதல் 150/- வரை உழைக்கலாம். நேரில் வரவும். தம்பியையா விறகு காலை 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. (11848)

## வீடு தேவை

அரச பணியில் உள்ள ஒரு குடும்பத்துக்கு அடிப்படை வசதிகள் கொண்ட வீடு ஒன்று குத்தகைக்கு அல்லது வாடகைக்குதேவை. நேரிலோ அல்லது கடித மூலமோ தொடர்பு கொள்க. ஸ்ரீகாந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3898)

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் நகரத்தை அண்மித்த பகுதியில் கூட்டுறவு நிறுவனம் ஒன்றிற்கு காரியாலயமாக உபயோகிக்க வீடு அல்லது கட்டடம் தேவை. மாவட்ட செயலாளர் T. C. C. S. Union, 182/4 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (11859)

## தேவை

வீடியோ கிளப்பில் வேலை செய்ய பெண் குமாஸ்தா தேவை. அத்துடன் தையல் வேலையில் அனுபவமும் கட்டிங் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. S.T.L வீடியோ கிளப், NO.3 நவீன சந்தை மேல்மாடி, திருநெல்வேலி. (2649)

புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் புதிய தையல் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலகு முறையில் பெண்கள் உடைகள் வெட்டி தைப்பதற்கும், மெஷினில் பூவேலை செய்வதற்கும் பயிற்சி அளிக்கப்படும் அத்துடன் எல்லா விதமான ஓடர்கள் ஏற்கப்பட்டு, குறித்த தவணையில் முடித்துக்கொடுக்கப்படும். தொடர்பு, 75, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். (2647)

எமது ஸ்தாபனத்திற்கு மனேஜர் தேவை. க.பொ.த (உ.த) சித்தியடைந்தவராகவும், நிர்வாகத்தை கொண்டு நடத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். சான்றிதழ்களுடன் எம்மை நேரில் சந்திக்கவும். 28 02.90 அன்று அலுவலகத்தில் சந்திக்கவும். ஆங்கிலம் எழுத, வாசிக்க, பேசத் தெரிந்தால் விசேட சலுகைஅளிக்கப்படும். பணிப்பாளர், 28, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (2650)

## பங்காளிகள் தேவை

ஸ்ரான்லி வீதியில் 3 அறைகள், குசினி, குளியலறை வசதிகள் கொண்ட கடை உண்டு. விபரங்களுக்கு எம்மைச் சந்திக்கவும். தமிழ் பல்துறை சேவை, 28, பிரதான வீதி' யாழ்ப்பாணம். (2651)

நல்ல நிலையிலுள்ள மேசைத்தராசு யூனியன் அவ்றி தேவை. மில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. உணவு தங்குமிட வசதி, கொடுக்கப்படும். K.S.R.K மில்ஸ் G. P S. லேன் கல்வியங்காடு. (11865)

## மணமகள் தேவை

யாழ் இந்துவேளாள உயர் குல மத்திய கிழக்கில் தொழில் புரியும் 35 வயது ஆணுக்கு அழகிய மணமகள் தேவை. குறிப்பு, முழுவிபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 104, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (11910)

யாழ் இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த பெற்றோர் 30 வயது கிரகபாவமற்ற நோர்வேயில் வசிக்கும் மகனுக்கு அழகும் குணமும் கல்வியறிவும் உள்ள பெண்ணைத் தேடுகிறார்கள். திருமணத்தின் பின் பெண் நோர்வேக்கு அழைத்துச் செல்லப்படுவார். குறிப்புடன் உடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 103, மே/பா உதயன் யாழ்ப்பாணம். (11840)

யாழ்ப்பாண இந்து வாணிபர் குல செவ்வாய்ப் பாவம் குறைந்த வர்த்தகருக்குப் பெற்றோர் 20-28 வயதுக் கிடைப்பட்ட அழகிய மணப்பெண்ணைத் தேடுகின்றனர். எம்மிடம் எல்லா இன மதத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (2624)

யாழ். இந்து வேளாள 32, வயது நிரம்பிய கோப்பிறட்டி இன்ஸ்பெக்டருக்கு செவ்வாய் குற்றமற்ற ஆசிரியப்பெண் விரும்பத்தக்கது. நட்சத்திரம் புனர்பூசம். 30, நிரம்பிய B.Sc. சிவில் என்ஜினியருக்கு நட்சத்திரம் மிருகசிரிடப்பெண் தேவை. தொடர்பு: A B C D E விவாக பொருத்துனர் 328, நாவலர்றோட்ஆனைப்பந்தி. (11867)

## விற்பனைக்கு

Golden & Angel Aquarium வளர்ப்பு மீன்கள் Motors, Tubelights, Nets, Uuder Gravel Filter, Toys, China Water Plants, Regulators, Ma.h and etc. Wise Guidance on Kennels. தொடர்பு S. PAVENDRA, 47, Temple Road, Jaffna. (2629)

## WANTED

**Audit/ Accounts Trainees**

Those who have Passed the G. C. E. A/L with Accounts As a Subject could apply. Apply immediately to-office manager, Accounting Systems & Services (Jaffna) Ltd 484/1 Hospital Road, Jaffna. (11905)

## ஜோதிடம்

வெளிவந்து விட்டது. (19-3-90) சனிமாற்றம் எங்கும் கிடைக்கும். விலை ரூ4/- (எல்லா ராசிகளின் பலன்கள்) விநியோகஸ்தர்கள் பூபால சிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். பதிப்பாசிரியை திருமதி. R. சத்தியதாசன் B. A. (cey) கமலா வாச் வேக்ஸ் K K.S. (2635-B)

## சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் எவ்வகையான பிரச்சினைகளையும் உன்னதமான மட்டக்களப்பு ஆரூட மாந்திரீகமுறைப்படி அரச அங்கீகாரம் பெற்றுள்ள பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரால் வெற்றிகரமாய் தீர்வு காணப்படும். தொடர்பு கொள்ளுங்கள்: ''சக்தி சரவணா 210, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். (யாழ் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) வியாழன் விடுமுறை. (2641)

## தவறிவிட்டது

கட்டட வரைபடங்கள் அடங்கிய சிறிய 2புத்தகங்கள் ஒரு பையுடன் யாழ்- பருத்தித்துறை வீதியில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுப்பவர்கள் தயவுசெய்து விலைமதிப்பீட்டுத் திணைக்களம் 148, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். (11912)

## கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Unsex) தனி சிகப்பு கறுப்பு நிற சேவல் பேடு (பிலிமத்), கறுப்பு வரிசேவல், (Dekalb) பிறவுண் பேடு, சேவல் (Cobb) புறொயிலர் குஞ்சுகள் (28-2-90) புதன் கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா ஒழுங்கை, சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகில். (11850)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள் Golden Comet Hyline Black பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய் புதன் கிழமைகளில் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (11818)

## அனெக்ஸ் வாடகைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில், ஒரு படுக்கை அறையும், குசினியும், சிறிய வரவேற்பறையும் சேர்ந்த மேல் வீட்டு அனெக்ஸ் வாடகைக்கு உண்டு. தேவையானவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும். இல. 40/5, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (2645)

## காஸ் குக்கர் திருத்த

உங்களுடைய GAS குக்கரில் பிழைகளா? இல்லையெனில் புதிய உதிரிப்பாகங்கள் மாற்ற வேண்டுமா? எதுவாயினும் மிகத்திறமையான முறையில் குறித்த தவணையில் திருத்திக் கொடுக்கப்படும். அதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம் D· முஸ்தபா யுப்ளிபஸார் 2 ஆம் மாடி யாழ்ப்பாணம். (1996)

## போட்டோஸ்ரட்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் தெளிவாக போட்டோ ஸ்ரற்செய்து கொள்ளவும். ஆங்கில ரைப்பிங், மொழி பெயர்ப்புகளுக்கும் ஸ்ரீ காந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3717)

## TYPEWRITERS

Typewriters வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள் Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/3828)

## House Hold Furniture

House Hold Furniture For Sale Drawingroom Suites, Cabinet, Dining table And Chairs, Beds Guitar, Nizlodica Ftc 83, Main Street, (Opp. st James Church) Jaffna (10868)

## German Language Classes

பட்டப் படிப்புகளைத் தொடர்வதற்கு உதவும் முகமாக மேற்படி வகுப்புகள் 26-02-90 இல் ஆரம்பமாகின்றன. இப்பாஷையுடன் தொடர்புள்ள மொழிபெயர்ப்புகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்பு Director of Studies German Cultural Association 33, Kandy Road, Jaffna. (11904)

# சட்டவிரோத மதுபான கடைகள் மூடப்பட்டன

கிளிநொச்சி, பெப் 25

கிளிநொச்சி பகுதியில்சட்ட விரோதமாக இயங்கி வந்த மதுபான கடைகள் யாவும் தற்போது மூடப்பட்டுள்ளன.

இதே வேளை கசிப்பு காய்ச்சி விற்பனை செய்பவர்களும் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்பவர்களும் தமது தொழிலைக் கைவிட்டு உள்ளனர்.

இதனால் அனுமதி பெற்ற மதுபான சாலைகளின் முன்னால் மது அருந்துபவர்களின் கூட்டம் அதிகரித்துள்ளது. (இ-76)

## இசை நிகழ்ச்சி

உலர்வலய அபிவிருத்தி நிறுவனத்தின் கலா மன்றம் வழங்கும் மாதாந்த கர்நாடக இசை நிகழ்ச்சி நல்லூர் நல்லை ஆதீனத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2.30-5.00 மணி வரை நடைபெறும். (சு)

## ஆட்சிக்குழு கூட்டம்

கொழும்புத்துறை,பெப்25

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இலங்கைக் கிளையின் ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு 23, சிவன் பண்ணை வீதி கொட்டடியில் இயக்கத் தலைவர் சட்டத்தரணி திரு. பொன் பூலோகசிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது. (சு-30)

# பிறந்ததின வாழ்த்து

[25-02-90]



## இ. லக்ஷனா

இன்பகாந்தராஜா - செந்தாமரைச்செல்வி தம்பதிகளின் செல்வப்புதல்வி லக்ஷனா தனது முதலாவது பிறந்தநாளை இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை டாடி, மம்மி, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், அத்தைமார், சித்தா, அத்தான்மார், மச்சாள்மார், அம்மம்மா, சித்திமார், பெரியடாடி, பெரியமம்மி, அக்காமார், அண்ணாமார் பல்கலையும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (2631)

# 60 ஆம் நாள் நினைவஞ்சலி



## திரு. த. நடேசு

(வர்த்தகர், கொடிகாமம் கண்ணன் கூல்பார்)

தோற்றம்: 5-5-1950

மறைவு: 28-12-1989


அன்புக்கணிகலனாக விளங்கி எம்மை வழி நடத்திய இதயத் தெய்வமே! தாங்கள் இல்லாத இல்லம் இருளில் மூழ்கியது. தங்கள் அன்பும் ஆதரவும் மற்றவர்களுடன் குழைந்து பழகும் பண்பும் மறக்க முடியாது.

தங்கள் ஆத்மா சாந்தியடைக.

தங்கள்
மனைவி, மக்கள்,
குடும்பத்தார், நண்பர்கள்.

கண்ணன் கூல்பார்
கொடிகாமம். (C/3407)

# ஓராண்டு நினைவஞ்சலி



## சுந்தரலிங்கம் சற்குருநாதன்

தோற்றம்: 11 - 05 - 1954

மறைவு: 07 - 03 - 1989

திதி: 25. 02. 1990

07 - 03 - 1989
அந்த செவ்வாய் காலை
நீ ......
மரண உலகிற்கு
மாலையிட்டாய்
எல்லோரினது
மனவாசல்களிலும்
பூத்துக்கொண்டு
இரகசியமாய்
நீ... மட்டும்
உதிர்ந்துவிட்டாயே!
பாசக்கூட்டினுள்
நாம் ஒன்றாக வாழ்ந்த
அந்தப் பொன்னான
நாட்களை
எண்ணிப் பார்க்கின்றோம்

நீ
பௌர்ணமியைப்போலவே
முழு நிலவாய்
முளைத்திருப்பாய்
ஏ...
அன்பு சற்குருநாதா!
பாசமே!
எம்மை-ஏன்
அமாவாசை ராத்திரிக்கு
அழைத்துச் சென்றாய்.
உனது
வார்த்தைகளுக்கு
வசீகரம்
தாலி கட்டியதால்
பொழுதுகள் கூட
புறப்படும் நேரத்தையறிய
முடியாது - ஆனால்
நீ
மௌனித்தே போனதால்
மாலைகளுக்கும்
காலைகளுக்கும்
கால் முடமானது.
அனைவரது
முகங்களுக்கும்
ராஜ விழிகளை
வரைந்து விட்டு
நீ மட்டும்
இருட்டு
விழிகளுக்குள்
மறைந்துகொண்டதேன்
எல்லா விலாசங்களையும்
சேகரித்துவிட்டு
உனது
முகவரியை மட்டும்
தொலைத்து விட்டாயே!
உனக்கேனடா
இத்தனை அவசரம்
மறு பரிசீலனை
செய்ய முடியாத
தீர்ப்பினை
வாசித்தாய்.

இளமை எழுதும்
வசந்த வாசகங்களை
எழுத்துக் கூட்டு முன்
காலம் எழுதிய
கடைசி வரியை
வாசித்துக்கொண்டாயே!
உனக்கு
மணவிழா நடத்த
முன்வந்தர்வகளை-உன்
மரண ஊர்வலத்திற்கு
அழைத்துச் சென்ற
மாப்பிளையாச்சே நீ.
சற்குருநாதா!
பேசத் தெரிந்த
வாக்கியங்களை
எடுத்துக்கொண்டு
புலம்புகின்றவார்த்தைகளை
விட்டு விட்டு
எங்கே போனாய்?
ஆனால் ஒன்று ......
நீ காலத்தால்
மறைந்தாலும்
கால காலமாய்
இதயத்தில் வாழும்
கவிதை.

எங்கள் அன்புச் செல்வமே! நீங்கள் எமை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்று விட்டதை எம்மால் நினைத்துக் கூட பார்க்கமுடியவில்லையே! எந்நேரமும் உங்கள் நினைவால் அம்மா துடிப்பது தெரியவில்லையா எங்களை விட்டு நீங்கள் எங்கும் போகாமல் எம்முடனே இருந்திடுங்கள். எங்கள் அன்புத் தெய்வமே என்றும் உங்கள் நினைவால் ஒவ்வொரு நிமிடமும் ஏங்கித் தவிக்கும்:

அன்பு அம்மா சா. அன்னபூரணம்.
அன்பு அண்ணா - சண்முகநாதன்,
அன்பு அண்ணி - பரமேஸ்வரி
அன்பு அக்கா - சிவா மகேந்திரன்,
அன்பு அத்தான் - மகேந்திரன்,
அன்பு அக்கா - அம்பிகா ராஜலிங்கம்,
அன்பு அத்தான் - ராஜலிங்கம்,
அன்புத் தம்பி - சிவநாதன்,
அன்புத் தங்கை - லதா,
அன்பு மருமகள் - சிவப்பிரியா.
அன்பு மாமா - சிவசுப்பிரமணியம்,
மச்சான்மார் - சிவநேசன், சிவகுமார்,
மச்சாள்மார் - சுவர்ணா, கௌரி, ஸ்ரீ, சுபா,
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

'சிவ நிலையம்'
வேலணை கிழக்கு,
வேலணை. (2628)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேமாவும் ரஞ்சனும் பதவி விலகவேண்டும் என்று கேட்கின்றார் வரதர்

திருகோணமலை, பெப். 25

சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கத் தவறிய ஜனாதிபதி பிரேமதாஸாவும் வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் பதவி விலகவேண்டும் என்று வடக்கு—கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

வடக்கு—கிழக்குபகுதிகளில் சட்டம் - ஒழுங்கு இல்லை என்று திரு. விஜேரத்தினா கூறியிருந்தார்.

இதற்குக்காரணம் மாகாண சபைக்கு அவசியமான பொலீஸ் அதிகாரங்களைஇலங்கை அரசு வழங்காததே ஆகும்.

எங்கள்மீது குற்றஞ் சாட்டுவதன்மூலம் தங்களுடைய நிலை என்ன என்பதை திரு. விஜேரத்தினா உணரவேண்டும். கடந்த ஜூன் மாதத்திலிருந்து இதுவரையில் சிங்களப் பெரும்பான்மைப் பகுதிகளில் பலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று திரு. வரதராஜப்பெருமாள் சொன்னார். என்று இந்திய வானொலி அறிவித்தது.

(ஒ-எ)

## கார் விபத்தில்...

என்று அறிவிக்கப்பட்டது.

இவ் விபத்து தொடர்பாக லொறிச் சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டார். (ஒ-எ

## வடமராட்சியில்...

இறுதிக் கட்டமாக நேற்று முன்தினம் உடுப்பிட்டி, நவிண்டில் ஆகிய இடங்களிலிருந்தும் படையினர் முகாம்களை மூடிக்கொண்டு வெளியேறினர்.

இதனை அடுத்து குடா நாட்டில் தற்போது கீரிமலை, மாவிட்டபுரம், அச்சுவேலி, வயாவிளான், காங்கேசன்துறை, பலாலி ஆகிய பகுதிகளில் மட்டுமே இந்தியப் படையினர் உள்ளனர்.

## மக்களின். . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் சண்டை நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் உறுதி அளிக்கின்றது.

ஆனால் சென்னைப் பேச்சுக்களின் போது ஆசனப் பங்கீடு பற்றி இதர அமைப்புக்கள் தெரிவித்த யோசனை விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

—இத்தகவல்களை திரு. மாத்தயா மேற்கு நாட்டுச் செய்தியாளர் ஒருவருக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார் என்று 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது. (உ)

# கலைஞருடனான பேச்சு; ஈ. என். டி. எல். எவ். விளக்கம்

சென்னை பெப்: 25

முதலமைச்சர் கருணாநிதியுடன் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட பேச்சுக்களின் போது இடம் பெற்ற விஷயங்களை ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் (ஈ. என். டி. எல். எப்.) செயற்குழு ஆராய்ந்தது

அதன் பின்னர் முன்னணியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் திரு. ஜி. ஞானசேகரன் பத்திரிகை அறிக்கை ஒன்றை விடுத்தார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் எமது முன்னணிக்குள்ள பிரதிநிதித்துவத்தை நாமாக முன் வந்து துறப்பது, தேர்தல் ஒன்றின் மூலம் எம்மைத் தெரிவு செய்து அனுப்பிய வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழர்களுக்குச் செய்யும் நம்பிக்கைத் துரோகமாகும்.

திரு. கருணாநிதி மற்றும் இந்திய அரசு மீதும் நாம் உயர் மதிப்பு வைத்துள்ளோம்.

அதற்காக திரு. கருணாநிதி தெரிவித்த சில கோரிக்கைகளை இயலமாட்டாத நிலையில் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று.

விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஊடாக இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸா இக்கோரிக்கைகளை திரு. கருணாநிதி மீது திணித்துள்ளார் என்பதை அறிந்தும்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## வில்பத்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார் என்றும் —

வேறுசிலர் காயமடைந்திருந்தனர் என்றும் —

உயிரிழந்த இளம்பெண் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்தவரென்றும் சொல்லப்பட்டது. ஆயினும் இதனை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை. (உ-10-9)

## கச்சதீவில்...

தது.

போராளிகளின் மறைவிடத்தை நெருங்கிய போது. கடற்படையினரை நோக்கிப் போராளிகள் இயந்திரத் துப்பாக்கியால் சுட்டனர் என்றும் பின்னர் அவர்கள் அங்கிருந்து ஒரு படகில் ஏறித் தப்பிச் சென்று விட்டதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

கச்சதீவில் முகாமிட்டு இருந்தவர்கள் எந்தப் போராளி அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவில்லை என்று இராமேஸ்வரம் செய்திகள் தெரிவித்தன.

இந்தியக்கடல் எல்லை அருகே உள்ள கச்சத்தீவில் நடந்த இச்சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் இலங்கைக் கடற்படை ரோந்து தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

1974 ஆம் ஆண்டு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் படி கச்சதீவு இலங்கை அரசுக்கு ஒப்படைக்கப்பட்டது.

இந்த ஒப்பந்த விதிகளின் படி கச்சதீவை இலங்கை அரசு இராணுவ - கடற்படை முகாமாக்கக் கூடாது என்றும்—

இந்த ஒப்பந்த விதியை மீறி இலங்கைக் கடற்படை கச்சதீவில் முகாம் அமைக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இந்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

இராமேஸ்வரத்தில் இருந்து யாழ்குடா செல்லும் வழியில் உள்ள கச்சதீவில் இலங்கைக் கடற்படையின் முகாம் அமைக்கப்பட்டால் இந்தியக் கடல் எல்லை அருகே தமிழ் நாட்டு மீனவர்கள் மீன் பிடிக்க இயலாத நிலை ஏற்படும் என்றும் இந்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-9)

## முழு அதிகாரப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்னை புறப்பட்டனர்.

தற்போது சென்னையில் தங்கியிருக்கும் ஈ. பி. ஆர். எல். எவ். மத்திய குழு உறுப்பினர் திரு. சாந்தன் இந்தக் குழுவினருடன் சேர்ந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

குழுவினர் ஈ.பி.ஆர்.எல். எவ் வின் அரசியல் ஆலோசனைக் குழுவினால் தயாரிக்கப்பட்ட — பத்துப் பக்கங்கள் கொண்ட — புதிய யோசனையை கலைஞரிடம் இன்று சமர்ப்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த யோசனைத் திட்டத்தில் —

வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டிய 16 விடயங்கள் கோடிட்டுக் காட்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்த 16 விடயங்களிலும் இலங்கை அரசு அதிகாரத்தைப் பரவலாக்குவதை கலைஞர் கருணாநிதி உறுதி செய்வாரானால் —

வடக்கு, கிழக்கு மாகாண சபையில் ஈ. பி. ஆர். எல். எவ்வுக்கு உள்ள சகல ஆசனங்களையும் விட்டுக் கொடுத்து, கலைஞர் விரும்பும் ஓர் அணியை அந்த இடத்துக்கு நியமிக்க ஈ. பி. ஆர். எல். எவ். வழி செய்யும் — என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.


நாளை நமதே

## 6ஆம் மாத நினைவஞ்சலி



அன்னை மடியில்:

24 - 06 - 1968

●

அன்னை பூமியின் மடியில்:

21 - 08 - 1989

லெப்ரினன்

### இ. சுதர்சன் சுதா (யூசி)

(பருத்தித்துறை)

வெற்றித் தேவதையின் வீரமைந்தன்
களம் பல கண்ட வீரவேங்கை
தன் உயிரை ஈந்து
தமிழ் இனத்தின் விடிவுக்காக
வரலாறு காணப் புறப்பட்டு
தானே ஒரு வரலாறு ஆகி
காலத்தை வென்று இன்று காவியமானான்!

அன்பிலகலா;
— தமிழீழ மக்கள் —

(சி-3912)

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்:

1946 - 05 - 25

●★●★

இறைவன் மடியில்:

1988 - 02 - 25

●



ஓமானில் காலமான

### எட்மன் கிறிஸ்ரிபன் அந்தோனிப்பிள்ளை

அவர்கள்

இவ்வுலகில் உமது கானம்
கேட்டு இன்புற்ற நாம்
மோட்ச வீட்டிலும் உமது கானம்
எமக்காக இசைக்க வேண்டுகின்றோம்.

25 - 2 - 90 ஞாயிறு திரேசம்மா கோவிலில் காலை 7-15 மணிக்கும் 28 - 2 - 90 உடுவில் செபமாலை மாதா கோவிலில் மாலை 4 மணிக்கும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மனைவி - புஸ்பா எட்மன்,
மக்கள் - [illegible],
உறவினர், நண்பர்கள்.

10/1, நக்கா வீதி,
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(11866)



## COULD THIS BE THE CAREER 'BREAK' YOU'VE BEEN WAITING FOR?

An Insurance Company which would be established shortly in Jaffna has Vacancies for:

**Manager**

Possess a pleasing personality and ability to negotiate with Heads of Mercantile and State institutions connected with the insurance.

Possess extensive experience in general administration and personnel management.

Responsibility and initiative are vital. The successful candidate with be required to plan and implement work systems liaise with appropriate authorities and run the operation of the company independently.

Considerable emphasis will be given to personal qualities of applicant such as maturity, initiative, enthusiasm, innovative thinking, good public relation and business acumen.

**Age: Above 40 years**

**Canvassers**

With a proven experience of 5 years in this field and a good command of English language both written and spoken is essential. Should have minimum qualification of G. C. E. (O/L). A desire for field work and possessing riding and driving licence are an advantage.

**General Clerks (Males / Females)**

Educational qualifications and Experience:

G. C. E. (A/L) and pass in 6 subjects in G. C. E. (O/L) Examination with 4 credit passes one of which should be English. one year experience in insurance related clerical work. Duties include filing, handling of other mail, customer inquiries and documentation. Should be able to attend to correspondence independently.

**Age: 20 to 35 years**

**Typist Clerk (English) — Female**

Educational qualifications and Experience:

G. C. E. (A/L) and pass in 6 subjects in G.C.E (O/L) Examination with 4 credit passes one of which should be English. Three (3) years experience as an English Typist in a reputed firm is essential. Knowledge in manupulating Elec-tric / Electronic Typewriters is an advantage. Duties include providing administrative support such as typing, filing, handling incoming / outgoing mails, maintaining registers and any other clerical related works.

**Age: 20 to 35 years**

Remuneration and Perquisites for above posts are Generous, Commensurate with Qualifications and Experience. Please Apply in writing on or before 15th march 1990 with all relevant details and marking the post applied for on top left corner of the envelope to:

The Advertiser
C/O UTHAYAN - 102

[C-3402]



# VACANCIES

## IRAQ

M/S Saleh Jamal & Company, a member of the Al Mula group of Companies, Kuwait, require for a Hospital project in Baghdad, Iraq. The following operation & Maintenance personnel.

1. **Project Manager - Maintenance** — 01

   Degree in Mechanical or Electrical Engineering with 15 years Experience with Atleast the Last 4 years in a Similar Position.

2. **Maintenance Engineers**

   - Heating, Ventilation & A/C — 3 NOS
   - Plumbing & Firefighting — 1 NO.
   - Building Automation System & Hvac Controls — 1 NO.
   - Electronics — 1 NO.
   - Telephones — 1 NO.
   - Electrical — 2 NOS

   All Engineers Should have a Degree & Experience of 7 to 10 years in the Relevant Field.

3. **Maintenance Foremen**

   - Hvac — 4 NOS
   - Plumbing & FF — 3 NOS
   - Electrical — 3 NOS
   - Electronics — 2 NOS

   All Foremen Should have a Diploma in Engineering with Minimum 5 years Experience in the Relevant Fields or I. T. I. or Equipment Qualification with Minimum 12 years Experience.

4. **Technicians**

   - Hvac — 18 NOS
   - Boiler — 6 NOS
   - Hvac Controls — 10 NOS
   - Building Automation System — 4 NOS
   - Mechanical Fitters — 6 NOS
   - Welders — 4 NOS
   - Electricians for High Tensionswitchgear & Transformers — 12 NOS
   - Electricians for Motor Control-centres/Electrical Panels — 20 NOS
   - Diesel Generator — 4 NOS
   - Lift — 4 NOS
   - Electronic Techs for Audio-Visual Auditorium Equipment — 2 NOS
   - Electronic Techs for low Voltage Equipment Like Fire Alarm systems, Central Clock, Nurse Call Systems, Etc — 4 NOS
   - Telephone Exchange — 4 NOS
   - Pipe Fitters — 12 NOS
   - Plumbers — 12 NOS
   - Centrifugal Chiller Mechs — 6 NOS

   All Technicians Should Have I. T. I or Equivalent Qualifications with minimum 7 years Experience in Maintenance.

★ Attractive salary package WITH NO REMITTANCE DELAY.
★ Contract period One year extendable.
★ Free air passage up and down.
★ Free accommodation and Food allowance.
★ And many other fringe benefits.

Apply on our Company standard Application Formes obtainable from our office for R. 10/- with 2 copies of Passport & 5 Passport size Photographs immediately.

Interviews by Foreign Representatives 1st week of March.

### THE HYDRAULIC ENGINEERING CO LTD

3/3, Stanley Thilakaratne Mawatha,
NUGEGODA.
(Opp. Cornels)

Labour Licence No. 425
Approval No. AL/429/6/90.

[2642]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## கந்தையா மதியாபரணம்

தோற்றம்: 20 . 5 . 1951

மறைவு: 25 . 2 . 1982

எம் குடும்பத்தின் சுடர் மணியே
இன்பத்தின் உறைவிடமே
கருணையின் வடிவே
நீ பிரிந்து எட்டாண்டுகள் சென்றாலும்
உனை நினைத்து எமது உள்ளம்
ஏங்கித் தவிக்குதையா

பிரிவால் துயருறும்
தாய், தந்தை, சகோதரங்கள்,
அக்கா, அத்தான், உற்றார்,
உறவினர்:

இல - 28
ஆசீர்வாதப்பர் வீதி,
யாழ்ப்பாணம்.

(11909)


# சகலரும் இணைந்து அபிவிருத்தி காண வேண்டும்

## பிரதிக் கல்விப்பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம், பெப் 25

''பலகால அழிவிற்குப் பின் இன்று அமைதி கிடைத்துள்ளது. அத்துடன் வேலை வாய்ப்புகளும் கிடைத்துள்ளன. ஆகவே சகலரும் இணைந்துஅபிவிருத்தி காண வேண்டும்.''

இப்படிக் கூறினார் பிரதிக் கல்விப்பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி.

யாழ்-இந்துக்கல்லூரியில் நேற்றுக் காலை நடந்த முறைசாராக் கல்வி படவரைஞர் பயிற்சி மாணவர்கள் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

திரு. சுதர்சன் தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசுகையில்

''ஒரே இடத்தில் அமர்ந்து சம்பளம் பெறுவதால் பயனில்லை. முறைசாராக் கல்விப் பிரிவால் வழங்கப்படும் தொழில்நுட்பக் கல்வி மூலம் குழுக்களாக இணைந்து அபிவிருத்தியில் நாட்டம் செலுத்த வேண்டும் என்றார்.

ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் வைபவத்தில்கலந்துகொண்டனர். (இ-3)

# ஷப்றா சென்ரலைட்ஸ் மோதல்

யாழ்ப்பாணம், பெப். 25

ஷப்றா அணியும் சென்ரலைட்ஸ் அணியும் சினேகபூர்வமான கிரிக்கெட்போட்டியில் ஈடுபடுகின்றன.

இப்போட்டி இன்று ஞாயிறு காலை 8.30 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.


## பதவி வெற்றிடம்

பிரபல்யமான மின்தறி நெசவாலைக்கு பயிற்சி பெற்ற மின்தறி நெசவாளர்கள், மற்றும் பயிலுனர்கள் தேவை. தகுதி அடிப்படையில் சிறந்த சம்பளம் வழங்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதி 15.03.90 க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

விளம்பர இல: 629,
C/O உதயன், யாழ்ப்பாணம்,

(2648)



## நன்றி நவிலல்



கடந்த 4-02-1990 இல் நடந்தேறிய திரு. திருமதி சசாங்கன், கலாதேவி ஆகியோரின் திருமண வைபவத்தின் போது கலந்து கொண்டு அவர்களை ஆசீர்வதித்த தேகிய உற்றார், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
திரு. திருமதி சசாங்கன் கலாதேவி
திரு. திருமதி சின்னராசா ஆச்சாரியார் குடும்பத்தினர்.

8/1 கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

11907


# வெளி மாகாணங்களில் இருந்து தமிழ் மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம் பெப். 25

வெளி மாகாணங்களில் இருந்து கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகியவற்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் விவரம்:

**கிளிநொச்சிக்கு**

எம். மகாதேவா (பொகவந்தலாவ).

**மன்னாருக்கு**

செல்வி எஸ். சவரி (நமுனகுல,)

**திருகோணமலைக்கு**

பி. சுகுமார் (பொலனறுவை), செல்வி என். ராஜலக்சுமி (கதுறுவெல), செல்வி கே. முருகமூர்த்தி (அக்கரப்பத்தன), எ. அன்வர்சத் (றத்துபொடிகல), ஏ. எச். எம் உபைதுல்லா (கம்பளை),

**மட்டக்களப்புக்கு**

எம். எஸ். ஜுனைதீன் (உடிஸ்பத்துவ), எஸ். அருளானந்தம் (புசெல்லாவ), திருமதி செபராணி ஜெயராசா (கண்டி), ஆர். நரராஜா (கொட்டகல), திருமதி பி. ஏ. காதர் (பொலநறுவை), எஸ். நடராசா (மனம்பிட்டியா), ஏ. எல். அஹமத் லெப்பே (கதுறுவெல), ஏ. எச். இப்ராகிம் (முத்துக்கல), எம் எம். கே. மொகமத் (பொலனறுவை) திருமதி எம். இ. ஜீவரத்தினம் (ஹல்தும்கல), எ. எம். அப்துல் ஜவாத் (பிபிலே), செல்வி பி. பொன்னையா (பதுளை), எஸ். கே. திருமஞ்சனம் (பாசற), திருமதி சி. சந்திரசேகரம் (கொழும்பு), செல்வி ஷேய்க் மொகிதீன் ஹமீதா (கொழும்பு), வேலுப்பிள்ளை விஸ்வலிங்கம் (கொழும்பு), எம். எம். இஸ்மால் லெப்பே (வெளிப்பென), ஏ. எம். மொகமத் (குருநாகல்), எச். எம். எம். றஹீம் (வாயூ), ஏ. எம். றபீக் (குளியாப்பிட்டி), எம். எஸ். சயது றாகு (பன்னால).

# வீரரின் நினைவுச் சின்னங்களும் சமூக, இன மீட்சிக்கானவையே

## நீர்த்தாங்கி கையளிப்பு விழாவில் உரை

உரிமை கோரி ஊர்வலம் புறப்பட்டு, படைகளின் துப்பாக்கி வேட்டுகளுக்கு இரையாகி உயிர்த்தியாகம் புரிந்த வீரர்களின் மரணங்கள் மட்டுமல்ல; அவர்களின் நினைவுச் சின்னங்கள் கூட சமூக, இன மீட்சிக்குத் துணை புரிகின்றன.

மருத்துவபீட மாணவர்களான த. சத்தியேந்திரா, சி. ஜெகநாதன் ஆகியோரின் முதலாண்டு நினைவஞ்சலி நீர்த்தாங்கிகையளிப்பு வைபவத்திற்குத் தலைமை தாங்கிப் பேசிய எழுத்தாளர் செம்பியன் செல்வன் இவ்வாறு கூறினார். 'அமரர்' த. சத்தியேந்திரா, சி. ஜெகநாதன் ஆகியோரின் நினைவாக யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் அரியாலை கிழக்கிலுள்ள சிறுவர்கள் காப்பகமாகிய அன்பகத்திற்கு 45 ஆயிரம் ரூபா செலவில் நீர்த்தாங்கி ஒன்றைக் கட்டி அன்பளிப்பு செய்துள்ளனர். இங்குள்ள சிறுவர்கள் போராட்ட காலங்களில் பல்வேறு காரணங்களால் ஆதரவற்றவர்களாக மாற்றப்பட்டவர்கள். ஆகவே, வீரர்களின் உதவி பாரதூரமான விளைவுகளுக்கு ஆளானவர்களுக்கு கிடைத்துள்ளது. இச் சிறுவர்களும் அதற்கான உரிமை கொண்டவர்கள்'' என்றும் அவர் கூறினார்.

இக் கூட்டத்தில் மருத்துவத் துறையைச் சார்ந்த மாணவன் எஸ். சிவதாஸ், மற்றும் சி. ஆர். ஜோசப், ஜே. பி., ஆசிரியர் அமலதாஸ் முதலியோரும் பேசினார்கள். (சு)

# உடற்பயிற்சி போட்டி

பருத்தித்துறை, பெப் 25

வடமராட்சிக் கோட்டக் கல்விப் பிரிவின் வருடாந்த உடற்பயிற்சிப் போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி தென் புலோலி புற்றளை மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சிக் கோட்டக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் தலைமையில் நடைபெறும் இப்போட்டியில் உடற்கல்வி கல்வி அதிகாரிகள் திரு. கே. நாகமணி திரு. ரி. அருணகிரிராஜா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (சு-118)


## கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம் கிளிநொச்சி

மேற்படி எமது சங்கத்தில் பின்வரும் பதவிக்கு பின்வரும் தகைமையுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிப்போர் ''பொதுமுகாமையாளர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம் கிளிநொச்சி'' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 08 - 03 - 1990 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். தபால் உறையின் இடதுபக்க மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப் படல் வேண்டும்.

### தமிழ், ஆங்கில தட்டெழுத்தாளர் பதவி

1. **சம்பள அளவுத் திட்டம் — 305/13**
   மாதாந்தம் 730—20 தர 10—25 தர 5—1055ம் அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.
2. **வேண்டிய தகைமைகள்:-**
   க. பொ. த. சாதாரண தரத்தில் (தமிழ் தட்டச்சு உட்பட) ஆறு (06) பாடங்கள் சித்தியுடன்நிமிடத்திற்கு 20 சொற்கள் தமிழிலும், நிமிடத்திற்கு 30 சொற்கள் ஆங்கிலத்திலும் வேகம் இருத்தல் வேண்டும்.
3. **வயது 25 — 40 வரையும்**

● குறிப்பு:-

1. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
2. சமீபத்தில் பெற்ற நற்சான்றிதழ்களுடன் தகைமைச்சான்றிதழ்களினதும் போட்டோப் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி. 15 - 02 - 90

[சி-3890]



# யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

## சேதப்படுத்தப்பட்ட கட்டிடங்கள் விற்பதற்கான கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் சேதப்படுத்தப்பட்ட பின்வரும் கட்டிட மிகுதிகளை நிலம் தவிர்ந்த ஏனைய சகல பொருட்களும் விற்பதற்கான கேள்விகள் யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1990ஆம் ஆண்டு பங்குனி மாதம் 09ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12. 00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலை விபரம். | கேள்விப் பிணைப்பு (மீளளிக்கப்படக்கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாதவை) |
|---|---|---|
| 01 பிரதான வீதியில் அமைந்துள்ள வாடி வீடு, முன் வீதியில் அமைந்துள்ள பொறியியாளர் கட்டிடம், யாழ் பொதுசன நூலகம் 3ஆம் கட்டிடப் பகுதி. | 100/- | 25/- |

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 1990ம் ஆண்டு பங்குனி மாதம் 7ஆம் திகதி புதன் கிழமை நண்பகல் 12. 00 மணிவரை மேலுள்ளவாறு கேள்விப்பணம் கேள்விப் படிவக்கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களின் இணைப் பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இக் கட்டிடங்களை பார்வையிட விரும்புவோர் 2ஆம் திகதி பங்குனி மாதம் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் யாழ் மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வி. பி. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
22- 02- 1990.

(சீ/3903)



# TV TRAVELS & TOURIST

# உடனடி வேலைவாய்ப்பு

## ★ SAUDI Operation & Maintenance Co. Ltd.

| | | | |
|---|---|---|---|
| 1 | CIVIL ENGINEER | 1600 | — 1900 |
| 1 | MECHANICAL ENGINEER | 2000 | |
| 1 | TELEPHONE TECHNICIAN | 9000 | — 1000 |
| 2 | GENERAL ELECTRICIAN | 650 | — 700 |
| 1 | ELECTRONICS TECHNICIAN | 900 | — 1000 |
| 2 | AUTO ELECTRICAL TECHNICIAN | 800 | — 900 |
| 2 | PUMP MACHANIC | 700 | — 900 |
| 1 | ELECTRICAL TECHNICIAN | 600 | — 700 |
| 1 | LAUNDRY SECTION HEAD | 700 | — 750 |
| 1 | GENERAL ELECTRICIAN | 600 | — 700 |
| 3 | PLUMBER | 600 | — 700 |
| 19 | FEMALE PORTERS | 300 | |
| 21 | PORTERS | 300 | |
| 2 | PAINTER | 500 | — 600 |
| 2 | AUTO WORK SHOP LABOURERS | 300 | |
| 1 | TAILOR | 600 | — 700 |
| 6 | WASHER | 300 | |
| 3 | LAUNDRY PRESS LABOURERS | 600 | — 700 |
| 5 | LAUNDRY LABOURERS | 300 | |
| 5 | LABOURER CIVIL SECTION | 300 | |

வயது எல்லை 21 — 47

நேர்முகப் பரீட்சை: 06 - 03 - 1990

## ★ KUWAIT

30 RESTAURANT WAITER உடன் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம்.

வயது எல்லை 18 — 40

சம்பளம்: 30 K.D

| | | |
|---|---|---|
| 40 | DRIVERS | — 55 K.D |
| 60 | HEAVY VECHICLE DRIVERS | — 70 K.D |
| 5 | MECHANICS | — 90 K.D |
| 3 | TYREMAN | — 50 K.D |
| 1 | SECRETARY (Female) | — 145 K.D |

ஆண்கள் வயது: 20 — 47   பெண்: 25 — 35

கடவுச்சீட்டு, 3 பாஸ்போர்ட் சைஸ் படம்,"அனுபவச்சான்றிதழ் என்பவற்றுடன் உடன் எமது காரியாலயத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**Front of Railway Station**

**Brown Road, Kokuvil.**

### அறிவித்தல்

எம்மிடம் சவூதி, குவைற்நாட்டிற்கு செல்வதற்கு கடவுச்சீட்டு தந்தவர்கள் அனைவருக்கும் 07-03-1990இல் பயணம் உள்ளதால் உடன் எமது காரியாலயத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

நன்றி

(சி30/97)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்டது இல்.

**பொருள்:**

வறுமைத்துன்பத்தை இரப்பதன் வாயிலாகத் தீர்ப்போம் என்று கருதி முயற்சியைக் கைவிட்ட வன்மையைப்போல் வன்மையானது வேறு இல்லை.

**உதயன்**

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 2288
யாழ்ப்பாணம்.
25-02-1990 த. பெ. இலக்கம் : 23

## தீவக மக்களின் தேவை

தீவுப்பகுதி மக்களின் நன்மை கருதி அம்புலன்ஸ் படகு ஒன்றைத் தந்துதவுமாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலய அதிகாரிகளிடம் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அம்புலன்ஸ் படகு தீவுப்பகுதி மக்களின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்று.

ஐ. நா. உயர் ஸ்தானிகராலய அதிகாரிகளுடனான சந்திப்பின்போது அரசாங்க அதிபர் இந்தக் கோரிக்கையை விடுத்தது வரவேற்கத்தக்கது.

தீவுப்பகுதிகளுக்கு ஓர் அம்புலன்ஸ் படகு தேவை என்பது இன்று நேற்று எழுந்த கோரிக்கை அல்ல.

யாழ். சுகாதாரத் திணைக்களம், அரசாங்க செயலகம், மற்றும் தீவுப்பகுதிகளைச் சேர்ந்த தொண்டர் ஸ்தாபனங்கள் இந்தக் கோரிக்கையை நீண்ட காலமாக விடுத்து வருகின்றன.

தற்போது ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலய அதிகாரிகளிடம் இக்கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. தீவுப்பகுதி மக்களின் தேவையை மனதில் கொண்டு ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம் இந்த ஆண்டுக்கான தனது உதவித் திட்டத்தில் இந்த அம்புலன்ஸ் படகையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பதே எமது கோரிக்கை ஆகும்.

காரைநகர், மண்டைதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகியவை ஏதோ ஒருவிதத்தில் யாழ்ப்பாணத்துடன் தரையால் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இடங்களில் இருந்து எந்த ஓர் அவசர நோயாளியையும் வாகனம் ஒன்றில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுவந்துவிட முடியும்.

ஆனால் முற்றிலும் கடலால் சூழப்பட்டுள்ள நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, இரணைதீவு மக்களின் நிலை அப்படி அல்ல.

கடும் நோயாளர்களை தனியார் படகுகளில் குறிகட்டுவானுக்குக் கொண்டு வந்து அங்கிருந்து வாகனங்கள் மூலம் சுமார் 16 மைல் தூரத்தில் உள்ள யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரவேண்டும்.

படகுகளை அமர்த்துவதில் தாமதம் ஏற்பட்டு நோயாளிகள் இறந்த சம்பவங்களும் உண்டு. அத்துடன் எல்லா நோயாளிகளும் பெரும் பணச் செலவில் படகுகளை அமர்த்த வசதி படைத்தவர்களும் அல்ல.

பெரும்பாலான தீவுகளில் இருந்து மக்கள் யாழ்ப்பாணத்தில் குடியேறுவதற்கு முக்கிய காரணம் தீவுப்பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாததே.

இப்படியான தேவைகளில் ஒன்றாக இந்த அம்புலன்ஸ் படகுச் சேவையையும் சேர்த்துக்கொள்ள முடியும்.

ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம் யாழ் அரசாங்க அதிபரின் கோரிக்கைக்கு முன்னுரிமை அளிப்பார்களானால் அது தீவக மக்களுக்கு மட்டும் அல்ல வடபகுதி மக்கள் அனைவருக்கும் செய்யும் பேருதவியாக இருக்கும்.

## வதிவிட சேவைகால பயிற்சி

யாழ்ப்பாணம், பெப். 25

கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு விஞ்ஞான ஆசிரியர்களுக்கான வதிவிட சேவைக்காலப் பயிற்சி நாளை 26 ஆம் திகதி முதல் யாழ் இந்துக் கல்லூரியிலும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இவ்வதிவிட சேவைக்கால பயிற்சி பாடவிதானத் துறைச் சிரேஷ்ட கல்விப் பணிப்பாளர் ஈ. ஜே. சற்குணராஜா தலைமையிலும் கல்விப் பணிப்பாளர் கலாநிதி சிரோண்மணி இராசரத்தினம் மேற்பார்வையிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தாவரவியல் விலங்கியல் பாடங்களுக்கான பயிற்சி நெறி கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலும் இரசாயனவியல், பௌதிகவியல், கணிதம் ஆகிய பாடங்கட்கான பயிற்சி நெறி யாழ் இந்துக் கல்லூரியிலும் நடைபெறும்.

இப்பயிற்சிப் பாடநெறி இணைப்பாளராக கல்வி அதிகாரி சி. கமலநாதனும் நிர்வாக இணைப்பாளராக கல்வி அதிகாரி எம். இறானுவும் பணியாற்றுவார்கள்.

ஐந்து தினங்களுக்கு நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்பவர்கள் தங்குவதற்கு வேண்டிய ஒழுங்குகளுடன் நாளை 26 ஆம் திகதி முற்பகல் 8.00 மணிக்கு முன்னர் சமுகங்கொடுக்க வேண்டும் என்று வேண்டப்பட்டுள்ளனர். (இ)

## பாதிக்கப்பட்ட மீனவருக்கு படகுகள் நிவாரணம்

யாழ்ப்பாணம், பெப். 25

வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குப் படகுகளை நிவாரணமாக வழங்க ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம் நடவடிக்கை எடுத்துள்ளது.

காரைநகரில் இந்தப் படகுகள் தற்சமயம் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவை விரைவில் மீனவர்களுக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

யாழ்நகருக்கு விஜயம் மேற்கொண்ட ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலய தலைமையகப் பிரதிநிதிகள் இந்தப்படகுகட்டும் வேலைகளைப் பார்வையிட்டனர். (இ — 3)

# வெளிநாடுகளில் பட்டப்படிப்பு புலமைப்பரிசில்; விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன!

யாழ்ப்பாணம், பெப். 25

வெளிநாடுகளில் பட்டப்படிப்பு புலமைப்பரிசில் பெறுவதற்கான விண்ணப்பங்கள் தகுதி வாய்ந்த மாணவர்களிடமிருந்து கோரப்பட்டிருக்கின்றன.

ரஷ்யா, பல்கேரியா, செக்கோஸ்லாவாக்கியா, யூகோஸ்லாவியா, ஹங்கேரி, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் புலமைப்பரிசில் வாய்ப்பைப் பெற விரும்பும் மாணவர்களிடமிருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றன.

விண்ணப்பதாரிகள் ஜீ. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையில் குறிக்கப்பட்ட நான்கு பாடங்களில், மூன்றில் திறமைச் சித்தியுடன் (Credit Pass) கூடிய சித்திபெற்றிருக்க வேண்டும். மேலும் 1990 செப்டெம்பர் முதலாம் திகதியன்று 19 முதல் 22 வயதுக்கு உட்பட்டவராகவும் ஜீ. சீ. ஈ. (சாதாரணதர) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றவராயும் இருத்தல் வேண்டும்.

குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நாட்டிலும் புலமைப் பரிசில் வழங்கப்படவிருக்கும் கற்கை நெறிகள் வருமாறு:-

★ ரஷ்யா:- மருத்துவமும் அதனைச் சார்ந்த துறைகளும், பொறியியலும் அதனைச் சார்ந்த துறைகளும், முகாமைத்துவம், கணக்கியல், பொருளியல்.

★ பல்கேரியா:- மருத்துவம், பொறியியல்.

★ செக்கோஸ்லாவாக்கியா:- மருத்துவம், மருந்தாக்கவியல்

★ யூகோஸ்லாவாக்கியா:- விவசாயம்

★ ஹங்கேரி:- மருத்துவம், பொறியியல்

★ இந்தியா:- எல்லாத்துறைகளும்

★ ஜப்பான்:- பொறியியல், தொழில்நுட்பம் (இருதுறைகளிலும் டிப்ளோமா மட்டும்)

ஒவ்வொரு கற்கைத்துறைக்கும் ஜீ. சீ. ஈ. பரீட்சையில் சித்திபெற்றிருக்க வேண்டிய குறிப்பிட்ட பாடங்கள் வருமாறு:-

★ மருத்துவம், மருந்தாக்கவியல், விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளும்:- பௌதிகவியல், இரசாயனவியல், விலங்கியல் ஆகியவற்றுடன் பின்வரும் பாடங்களில் ஒன்று — தாவரவியல் / தூயகணிதம் / பிரயோககணிதம் / கணிதம் (பொறிமுறை), விவசாயம்.

★ இயந்திரவியலும் அதனைச் சார்ந்த துறைகளும்:- பௌதிகவியல், இரசாயனவியல், தூயகணிதம் ஆகியவற்றோடு பிரயோக கணிதம் அல்லது கணிதம் (பொறிமுறை).

★ முகாமைத்துவம், கணக்கியல், பொருளியல் துறைகள்:- கணக்கியல், வர்த்தகம், பொருளியல் ஆகியவற்றுடன் வேறு ஒரு பாடம்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் மார்ச் 7 ஆம் திகதிக்கு முன்னர் ''செயலாளர், வெளிநாட்டு முகவர் நிலையங்கள் கிளை, உயர்கல்வி, விஞ்ஞானம் தொழில்நுட்பவியல் அமைச்சு, இல. 18, வோட் பிளேஸ், கொழும்பு-7 என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

இந்த புலமைப்பரிசில் வாய்ப்புத் தொடர்பான அறிவித்தல் 1990 பெப்ரவரி 8 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கிறது. (எ)

## வடக்கு, கிழக்கு மாகாண சபையின் போக்குவரத்துச்சபைச் சட்டம்: நீதிமன்றம் நிராகரிப்பு

கொழும்பு, பெப் 25

வடக்கு - கிழக்கு மாகாண போக்குவரத்துச்சபை ஒன்றை அமைக்கும் சட்ட மூலம் அரசமைப்புக்கு முரணானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

இது தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாண சபை தயாரித்த சட்டமூலம் முழுவதுமே அரசமைப்புக்கு முரணானது.

சட்டமூலத்தின் சில விதிகள் அரசுக்குள்ள சில பிரத்தியேக அதிகாரங்களையே மறுப்பதாக உள்ளது.

இப்படி உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்தது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை இச் சட்டமூலத்தை நிறைவேற்றி மாகாண ஆளுநருக்கு அங்கீகாரத்துக்காக அனுப்பிவைத்தது.

ஆளுநர் அதற்கு அங்கீகாரம் வழங்க இரண்டு தடவைகள் மறுத்துவிட்டார்.

அதன்பின்னர் சட்டமூலம் அரசமைப்புக்கு உட்பட்டதா என்பதை ஆராய ஜனாதிபதி அதனை உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தார். (உ-எ)

## அங்கிருந்து வருகின்றன! ஆனால் இங்கிருந்து இல்லை!!

யாழ்ப்பாணத்தில் இருந்து தபால் 'பார்சல்' களை கொழும்புக்கு அனுப்ப முடியாது. ஆனால் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பார்சல்களை அனுப்ப முடியும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தபால் பார்சல்கள் கொழும்புக்கும், மற்றைய இடங்களுக்கும் அனுப்புவதற்கு 1984 ஆம் ஆண்டு முதல் அனுமதி மறுக்கப்பட்டு வந்தது.

ஆனால் நிலைமை சீரடைந்த பின் கொழும்பு உட்பட மற்றைய பகுதிகளில் இருந்து தபால் பார்சல்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுகின்றன.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்து பார்சல்களை ஏற்பது சம்பந்தமான முடிவில் இதுவரை மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை. (இ-3)

## இந்தியப்படை இருக்கும்வரை சுதந்திர விசாரணை இல்லை

### அமைச்சர் ரஞ்சன் கூறுகிறார்

கொழும்பு, பெப். 25

இந்திய அமைதிப்படை இங்கு இருக்கும்வரை வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இலங்கை அரசினால் சுதந்திரமான விசாரணைகள் எதனையும் மேற்கொள்ள முடியாது.

இவ்வாறு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா கொழும்பில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

ஈ. பி. ஆர். எல்.எப். இயக்கம் 500 ரூபா நோட்டுக்களை அச்சிட்டுள்ளது என்று அரசு முன்னர் பெரிதாகக் குற்றஞ் சாட்டியது. ஆனால் இதுவரை எவர்மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதுபற்றி உண்மையான நிலைமை என்ன? என்று செய்தியாளர் ஒருவர் கேட்டார்.

அதற்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் முன்கண்டவாறு சொன்னார். (ஒ-எ)

## யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து 61பேர் டாக்டராகச் சித்தி

யாழ்ப்பாணம் பெப் 25

யாழ் பல்கலைக் கழக வைத்திய பீட இறுதியாண்டு முடிவுகள் வருமாறு;

**முதலாம் வகுப்பு**

செல்வி எஸ். குமாரசாமி (மருத்துவம், குழந்தை நோயியல், பிரசவ இயல், பெண் நோயியல் ஆகியவற்றில் அதி விசேட சித்தி), செல்வி எஸ். சுவாமிநாதன் (ரண சிகிச்சை மருத்துவம், குழந்தை நோயியல், பிரசவ இயல், பெண் நோயியல் ஆகியவற்றில் அதி விசேட சித்தி).

**இரண்டாம் வகுப்பு**

கே. ஆனந்தன், செல்வி வி. கணேசன் (பிரசவ இயல், பெண் நோயியலில் அதி விசேட சித்தி), கே. ஜெகநாதன், ஜே. எச். எஸ். ஜெயரஞ்சன், செல்வி என். கனகசபை (குழந்தை நோயியல், பிரசவ இயல், பெண் நோயியல் ஆகியவற்றில் அதி விசேட சித்தி), பி. குலத்துங்க கோகுலன் (மருத்துவத்தில் அதி விசேட சித்தி) செல்வி என். குமாரசாமி, எஸ். மனோகரன், செல்வி ரி. நவரத்னம், செல்வி எஸ். பரமநாதன், எஸ். ஏ. புவிநாதன், செல்வி என். சபாரத்தினம் (பிரசவ இயல், பெண் நோய் இயலில் அதி விசேட சித்தி), செல்வி ஏ. சந்திரசேகரம், செல்வி எஸ். சேனாதிராசா, என். சிறீஸ்கந்தராசா, எல். எல். சுகிர்தராசா, செல்வி வை. தனபாலசிங்கம் செல்வி ரி. துரைராசா [ரண சிகிச்சை, மருத்துவத்தில் அதி விசேட சித்தி], செல்வி எஸ். வேலுப்பிள்ளை, கே. விக்னேஸ்வரன், ஜி. விஜயகுமார், எம். விஜயகுமார், ஆர். சுதர்சன், செல்வி ஜி. அம்பலவாணர்.

**சாதாரண சித்தி**

[illegible] செல்வி ஏ. குமாரசாமி, செல்வி எஸ். பிரான்சிஸ், பி. ஜேசுதாஸ், செல்வி கே. தம்பிப்பிள்ளை, எஸ். கிருஷ்ணகுமார், செல்வி எஸ். பத்மநாதன், எஸ். ஜி. ரவீந்திரன்பி. அருள்பிரகாசம், செல்வி எம். அருணாசலம், ஜே. ஏ. பாலசிங்கம், செல்வி எஸ். பாலசுப்பிரமணியம், செல்வி ரி. பாலசுப்ரமணியம், செல்வி என். குணரத்னம், செல்வி. எச். சண்முகராசா, செல்வி சி. கந்தையா, கே. காந்தகுமார், செல்வி எம். காசிநாதர், கே. கதிர்காமதாஸ், எம். மகேந்திரன், செல்வி எம். கனகசபை, செல்வி கே. நடராசா செல்வி பி. நாகலிங்கம், எஸ் நிமலன், கே. ராஜாராம், எஸ். சந்திரகுமார், கே. செந்தில் குமரன், எஸ். சேஷாமணி, செல்வி ஏ. சிதம்பரப்பிள்ளை, எஸ். சுதோகுமார் செல்வி ஆர். வடிவேலு, கே. யோகசாந்தி, செல்வி ரி. குணநாயகம், எஸ். சோமஸ்கந்தராசா, கே. ஜெயந்தன். (க 3)

## "புலவர் தேறல்" நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் பெப். 25

வதிரி சைவப் புலவர் சி. வல்லிபுரம் ஆசிரியரின் அந்தியேஷ்டியும் ''புலவர் தேறல்'' என்ற நூல் வெளியீடும் வதிரி திருவள்ளுவர் அகத்தில் 28 ஆம் திகதி புதன்கிழமை காலை நடைபெறும்.

முன்னாள் தலைமை ஆசிரியர் திரு. க. முருகேசு தலைமை வகிக்கும் நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் சிவத்தம்பி வெளியீட்டுரை நிகழ்த்துவார் கலாநிதிசுப்பிரமணியஐயர்பாராட்டுரையும் தெணியான் குறிப்புரையும் வழங்குவார்கள். (க)

## ஆய்வுரை

யாழ்ப்பாணம், பெப். 25

இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு திருமதி அம்மன் கிளி முருகதாஸ் யாழ்ப்பாணம் விக்னா ரியூசன் சென்றர் முன்பாக உள்ள மணியம் கட்டடத்தில் ''நாவலர் ஆய்வும் கைலாசபதியும்'' என்னும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்துவார். (க)

## 61 புதிய டாக்டர்களும் நியமனத்துக்கு 1 வருடம் காத்திருக்க வேண்டும்

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். வைத்திய பீடத்தில் இறுதி ஆண்டுப் பரீட்சையில் சித்தி அடைந்த 61 புதிய டாக்டர்களும் நியமனம்பெற ஒரு வருடம் காத்திருக்க வேண்டுமாம்.

யாழ். வைத்திய பீடத்தில் கடந்த டிசம்பர் இறுதியில் நடந்த இறுதிப் பரீட்சையில் தோற்றியவர்களில் 61 பேர் சித்தி அடைந்துள்ளனர்.

இவர்கள் சித்தி அடைந்தும் ஒரு வருடம் நியமனத்துக்கு காத்திருக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதாம்.

கொழும்பு மருத்துவ கல்லூரி இறுதிப் பரீட்சைகள் இவ்வருட இறுதியில்தான் நடைபெற இருக்கின்றன.

அதன் பின் அவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் போதுதான் யாழ். மருத்துவ பீட புதிய டாக்டர்களுக்கும் நியமனம் வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த ஒரு வருடத்தை வீணாக்கும் இவர்கள் மீண்டும் 91 ஆம் ஆண்டு ஜனவரியில் நியமனமாகும்போதும் ஒருவருட உள்ளகப் பயிற்சியை முடித்த பின்பே நிரந்தர நியமனம் வழங்கப்படும் என அறியவந்தது. (இ-3)

## பாதுகாப்பு பற்றி விளக்கம்

இராமநாதபுரம், பெப். 25

மண்டபம் பகுதியிலும் அதைச்சுற்றியுள்ள இடங்களிலும் பொலீஸார் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தக் கூடிய நிலையில் தயாராக இருப்பதைப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் வால்டர் தேவாரம் நேற்று முன்தினம் செய்தியாளர்களை அழைத்துச் சென்று விளக்கிக் காட்டினார்.

பாம்பன் வீதி பாலத்தை எதிர்நோக்கிய வண்ணம் ஜப்பான் பாணியில் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டுள்ளன.

## சமய சந்நிதியில்

### இலட்சார்ச்சனை

சுழிபுரம், பெப் 25

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் தேவஸ்தான இலட்சார்ச்சனை 28 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் மார்ச் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

மாசி மகத் தீர்த்தம் சனிக்கிழமை நடைபெறும். (க-28)

## வாசகர் திருமுகம்

### தமிழ் எழுத்துச் சீராக்கம்

இவ்வாண்டு முதல் தமி
மொழி அமுலாக்கல் அமைச்
இந்தியா, சிங்கப்பூர் ஆகி
நாடுகளைப் பின்பற்றி தமி
மொழி எழுத்துக்களை
சீராக்க முனைந்துள்ள
அனைவரும் அறிந்தகே
இதனடிப்படையில் முக்கி
நாளேடுகள் (உதயன் உட்பட
தொலைக்காட்சி என்ப
இவ்வெழுத்துச் சீராக்க
தைப் பின்பற்றி வருகி
றன.

இருந்தபோதிலும் கல்
அமைச்சோ, யாழ் கல்வி
திணைக்களமோ இது விடய
தில் எதுவித அறிவுறுத்த
களையும் இதுவரை பாட
சாலைகளுக்கு வழங்
வில்லை. எனவே பால
பாடசாலைகளிலும் ஆர
பப் பாடசாலைகளிலு
பழைய முறையில் எழுத்து
கள் சற்பிக்கப்படுகின்றன
இதனால் எதிர்வரும் ஆண்
களில் மாணவச் சிறார்க
எழுத்துப் பிரயோகத்தி
தடுமாற்ற நிலையில் இருக்
வேண்டியேற்படும்

எனவே இது விடயத்தி
கல்வித்திணைக்களத்தி
நிலை என்ன? பாலர் கல்வி
குப் பொறுப்பான உத்தியோ
கத்தர்கள் (அதிகாரிகள்) இ
விடயத்தில் பாராமுகமா
இருக்கக்கூடாது. தமிழ் எழு
துச் சீராக்கத்தைப் பால
வகுப்புகளில் அமுல்படுத்
நடவடிக்கை எடுக்கவே வ
டும் செய்வார்களா?

நன்றி

ஆசிரியர். கனகேஸ்வரன்
அளவெட்டி.

### யாழ்தேவிப் பிரயாணம்

யாழ்ப்பாணத்துக்கு
கொழும்பில் இருந்து நா
ரயில்கள் இருக்கும் போதே
எல்லா வண்டிகளும் நிரம்
வழிந்தன. இப்போது ஒ
யொரு யாழ்தேவி மாத்திர
ஓடும்போது பிரயாணிகளி
அவலத்தைச் சொல்ல
தேவையில்லை.

யாழ்தேவியில் இருக்க ஆ
னம் கிடையாதவர்க
8 மணி நேரமும் நின்ற நி
யில் முழுப் பிரயாணத்
யும் செய்யவேண்டியிரு
கிறது.

குடிநீர் கூடக் கிடையாது
கக்கூசுகள் துப்புரவு செய்ய
படாமல் துர்நாற்றம் வீ
கின்றன.

இந்த நெருக்கடிக்கு
வடை, கடலை, பழங்கள்
குளிர்பான வியாபாரிகள்
பிரயாணிகளை இடித்து
மிதித்தும் தங்கள் விய
பாரத்தை நடத்துகிறார்கள்
இவர்கள் கொள்ளை இல
பம் வைத்து விற்பனை செ
கிறார்கள். ரயில் நிலைய
பொறுப்பதிகாரிகள் இதை
கவனத்திற்கு எடுப்பார்களா

ஒரு பிரயாணி
111, செம்மணி றோட்,
நல்லூர்

## அப்பியாசக் கொப்பி உற்பத்தி

வாழைச்சேனை காகி
ஆலையில் இவ்வருடம் இ
வரை 10.500 டசின் அப்பி
யாசக் கொப்பிகள் உற்பத்தி
செய்யப்பட்டு விநியோகிக்க
பட்டுள்ளன.

1988ல் 66,000 டசின் உ
பத்திசெய்யப்பட்டது. கடந்த
வருடம் இத்தொகை 48,100
ஆக வீழ்ச்சியடைந்தது என
அதிகாரியொருவர் தெரிவித்
தார்.

## ஆஸ்திரேலிய செய்தியாளர் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், பெப். 25

ஆஸ்திரேலிய ஒலிபரப்புக்
கூட்டுஸ்தாபன செய்தி
யாளர் திரு. பீட்டரமாஸ்
யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இந்து - பசுபிக் பிராந்திய
செய்தியாளரான இவர் நக
ரின் பல பகுதிகளுக்கும் விஜ
யம் செய்து பார்வையிட்
டார். (க-3)

நம்பிக்கை நாணயத்தின் சின்னம்-ஷப்ரா



கூர்ந்து கவனியுங்கள்!

ஷப்ரா தரும் வட்டி வீதங்களை

கூர்ந்து கவனியுங்கள்!!

நிலையான முதலீடுகள் கீழ்கண்ட வட்டி வீதங்களில் வரவேற்கப்படுகின்றன

| 6 மாதங்கள் | 1 வருடம் | 2 வருடங்கள் | 3 வருடங்கள் |
|---|---|---|---|
| 18% | 20% | 23% | 24% |

பணிப்பாளர் சபை

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
A- I- B- (Lond) முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம்
A- I. B. (Lond.) பொதுமுகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி
B. A. (Hons)

திருமதி. ஆர். பாலசுப்பிரமணியம்

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2.230,000 | 4.365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,386,336 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577.482 |
| வங்கிக் கடன்கள் | 1 791.516 | 8,283.818 | 7,718.284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386.371 | 16,206.887 | 25,811.712 |
| வைப்பாளருக்கான வட்டி | | | |
| செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1.356.206 | 1,372,825 | 2,330.012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

★ முதலீட்டுப் பாதுகாப்பு ★ திறமையான சேவை ★ சிறந்த வருமானம்

நிதித்துறையில் உங்கள் நண்பன்

# ஷப்ரா யுனிக்கோ பினான்ஸ் லிமிடெட்

61, நியு புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலைபேசி இல: 589310 & 500576

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

SHABRA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி - விடுதலைப்புலிகள் தூதுக்குழு சந்திப்பு



விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தூதுக்குழு ஒன்று கடந்த வியாழன் இரவு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவை அவரது சுசரித மாவத்தை இல்லத்தில் சந்தித்துப் பேசிய போது எடுக்கப்பட்ட படம். மக்கள் முன்னணியின் சார்பில் கலந்து கொண்ட அதன் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா), செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி, டாக்டர் அன்ரன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம் ஆகியோரும், அரசாங்கத் தரப்பில் பேச்சுக்களில் பங்குபற்றிய உயர்கல்வி, விஞ்ஞான, தொழில் நுட்பத்துறை அமைச்சர் ஜனாப். ஏ. ஸி. எஸ். ஹமீத், ஜெனரல் சேபால ஆட்டிகல, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க, பொலீஸ் மா அதிபர் திரு. ஏர்னஸ்ட் பெரேரா ஆகியோரும் ஜனாதிபதியுடன் காணப்படுவதைப் படத்தில் காணலாம். (உ)

### சிறுகதை நூல் வெளியீடு

இளம் படைப்பாளி இளையவனின் ''காணி உறுதி'' சிறுகதை நூல் ஆய்வரங்கு வேலணை தெற்கு ஐயனார் சனசமூக நிலையத்தில்இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு நடைபெறும்.

திரு. கே. சிவகுலசிங்கம் தலைமை வகிப்பார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா சிறப்புரை நிகழ்த்துவார்.

திருவாளர்கள் ரி. தர்மராஜா, வி. செல்லத்துரை எஸ். சண்முகவடிவேல், எம். ஜெயராமசர்மா ஆகியோர் ஆய்வுரை செய்வார்கள்.

நூலசிரியர் பதிலுரையும் செல்வி. அ. ஸ்ரீபாமாவின் நன்றியுரையும்இடம் பெறும்.

### சலூன் கட்டண அதிகரிப்பு

வடஇலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கம் மார்ச் முதலாம் திகதி வியாழன் தொடக்கம் சிகை அலங்கரிப்புக்கான கட்டணங்களை அதிகரிக்க உள்ளது.

தலைமுடி, சேவ் செய்வதற்கு 15ரூபா, தனிய தலைமுடி 13ரூபா, சேவ் 5ரூபா, சிறுவர்களுக்கு 10 ரூபா, பெண்களுக்கு 30ரூபா, பெண் சிறுமிகளுக்கு 15ரூபா, ஹீட்டர் பிடிக்க மட்டும் 5ரூபா இவ்வாறு தெரிவிக்கப்படுகிறது. (க-51)

### பயிற்சி பட்டதாரி ஆசிரியர்

யாழ்ப்பாணம், பெப். 25

வேலையற்று இருக்கும் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் நோக்கத்துடன் அவர்கள் வடக்கு - கிழக்கு மாகாண சபையினரால் பயிற்சிப் பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

முதல் தொகுதியினரின் பட்டியல் யாழ்-கல்வித்திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

இதில் நியமனம் பெற்றவர்களை கல்வித்திணைக்களத்துக்கு எதிர்வரும் 27ஆம் திகதி வரும்படி கோரப்பட்டுள்ளது. (க-3)

# ஈழ விடயத்தில்'றோ'வின் தலையீடு!

# 'சண்டே மெயில்'வெளியிட்ட தகவல்

இலங்கை விவகாரத்தில் இந்தியப் புலனாய்வு நிறுவனமான 'றோ' வின் தலையீடு இன்னமும் இருப்பதாகத் தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதி சந்தேகம் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவில் இருந்து வெளிவரும் 'சண்டே மெயில்' சஞ்சிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இது பற்றி அச் சஞ்சிகையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

ராமேஸ்வரத்தில் இரு வாரங்களுக்கு முன்னர், புதைத்து வைக்கப்பட்ட பெருந்தொகையான ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

இந்த ஆயுதங்கள் கடத்தப்பட்டு தமிழகத்தினுள் கொண்டு வரப்பட்டதில் இந்திய புலனாய்வு நிறுவனமான 'றோ' விற்கும் பங்கு இருக்கிறது என்று தமிழக முதலமைச்சர் கருணாநிதி சந்தேகம் தெரிவித்திருக்கிறார்.

திரு. கருணாநிதி தனது சந்தேகத்தைப் பகிரங்கமாக வெளியிட்டது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

கடந்த சில ஆண்டுகளாகத் தமிழர் பிரச்சினையில் 'றோ' தீவிர ஈடுபாடு காட்டி வந்தது.

தேசிய முன்னணி அரசு பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து ஈழத் தமிழர் விடயத்தில் ஓரம் கட்டும்படி 'றோ'விற்குப் பிரதமர் திரு. வி. பி. சிங் உத்தரவிட்டார்.

சில மாதங்களுக்கு முன்னர் தான் 'றோ'வின் பங்கை திரு. கருணாநிதி உட்பட தமிழ்நாடு அரசியல் வாதிகள் பலமாகக் கண்டித்திருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் கொலை செய்யப்பட்டதாக எழுந்தசெய்தியைத் தொடர்ந்து இக் கண்டனம் எழுப்பப்பட்டது.

அச்சமயத்தில் இலங்கை அரசுடன் விடுதலைப்புலிகள் பேச்சுக்களை நடத்திக்கொண்டிருந்தனர். அப்போது விடுதலைப் புலிகள் மத்தியில் குழப்பநிலையை ஏற்படுத்தவே 'றோ' திட்டமிட்டு இப் பொய்யான தகவல்களைப் பரப்பியது என்று கூறப்பட்டது.

இலங்கையில் இருந்து 1984 இல் போராளிகளும் அகதிகளும் தமிழ்நாடு செல்லத் தொடங்கினர். அத்துடன் 'றோ'வின் தலையீடு இலங்கை விஷயத்தில் ஆரம்பமானது.

இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்று அப்போது தமிழக அரசியல் வாதிகள் இந்திய அரசை வற்புறுத்தி வந்தனர்.

ஆனால் இந்திரா காந்தி இராணுவத்தை அனுப்ப மறுத்தார். அதற்குப் பதில் 'றோ'வின் தலையீடு இலங்கை விஷயத்தில் ஆரம்பித்தது.

வெறும் பயிற்சி மட்டுமல்ல. தான் பங்குபற்றிய நடவடிக்கைகளுக்குத் தேவையான ஆயுதங்களையும் போராளிகளுக்கு 'றோ' விநியோகித்தது.

அமைதிப்படை வட்டாரம் ஒன்றின்படி, முதலில் இலங்கை இராணுவத்திற்கு எதிராகவும் பின்னர் இந்திய அமைதிப்படைக்கு எதிராகவும் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்ட நிலக்கண்ணி வெடிகள் 'றோ'வின் ஆராய்ச்சிப்படி தயாரிக்கப்பட்டவையாம்.

அமைதிப்படை இலங்கைக்குச் சென்று போராளிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையத் தொடங்கியதும் 'றோ' வின் நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்பட்டது. படிப்படியாக 'றோ' அகற்றப்பட்டது. அமைதிப்படையுடன் நேரடியாகவே போராளிக் குழுக்கள் சம்பந்தப்பட்டு வந்தன.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப் போராளிகள் 13 பேர் தற்கொலை செய்ததும் உண்ணாவிரதம் இருந்து திலீபன் இறந்ததும் அதைத் தொடர்ந்து அமைதிப்படை - விடுதலைப் போராளிகள் மோதல் ஏற்பட்டதும் மீண்டும் 'றோ' வின் நடவடிக்கைகளை முன்னுக்குக் கொண்டு வந்தன.

இக்காலகட்டத்தில் 'றோ' அதிகாரிகள் தமிழர் பகுதிகளில் தங்கியிருந்து அமைதிப்படையின் பணி பற்றி சுயாதீனமாக மதிப்பீடு ஒன்றை நடத்தி வந்தனர் என்று அமைதிப்படை வட்டாரம் தெரிவித்தது.

1988 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 'றோ' புதிய பங்கு ஒன்றை ஏற்றது.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக விடாது தாக்குதலை அமைதிப்படை நடத்தி வந்த அதே நேரத்தில் 'றோ' விற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே நீண்ட தொரு பேச்சுவார்த்தை ஆரம்பமானது.

சென்னையில் 'றோ' அதிகாரிகளுடன் விடுதலைப்புலிகள் சார்பில் திரு. கிட்டு பேச்சுக்களை நடத்தி வந்தார்.

பின்னர் இலங்கை அரசுடன் பேச்சுக்கள் நடந்த அதே நேரத்தில் 'றோ' வை விடுதலைப்புலிகள் இயக்கம் பலமாகக் கண்டிக்கது.

'றோ' வுடன் தொடர்பு வைப்பது இல்லை என்று விடுதலைப்புலிகள் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அறிவித்தார்.

இக் கட்டத்தில் தான் பிரபாகரன் - மாத்தையா மோதல் என்ற செய்திகள் வெளிவரத் தொடங்கின.

பிரபாகரனுக்கும் மாத்தயாவுக்கும் இடையே பிளவை ஏற்படுத்த 'றோ' எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன என்று விடுதலைப் புலிகள் வட்டாரம் தெரிவித்தது.

பிரபாகரன் - மாத்தயா மோதல் செய்தியை அமைதிப்படை தான் உருவாக்கியது என்று றோ கூறியது.

அமிர்தலிங்கம் கொலைச் சம்பவத்துக்கு 'றோ' வே காரணம் என்று இன்னும் தமிழ் நாட்டில் உள்ள பிரபல அரசியல்வாதிகள் சிலர் நம்புகின்றனர்.

கட்டம் கட்டமாக அமைதிப்படையை விலக்க ராஜீவ் காந்தி ஒப்புக்கொண்ட பின்னர், தமிழ் தேசிய இராணுவம் என்ற அமைப்பை உருவாக்க ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்துக்கும் அதன் தோழமை இயக்கங்களுக்கும் 'றோ' உதவியளிக்கத் தொடங்கியது.

உண்மையில் ராஜீவ் நிர்வாகத்தின் கடைசிக் காலத்தில் இலங்கை சம்பந்தமாக இந்தியக் கொள்கையை 'றோ' புலனாய்வு நிறுவனம் தான் தீர்மானித்து வந்தது. இது விஷயத்தில் அமைதிப்படையின் கருத்துக்களுக்கும் வெளியுறவு அமைச்சின் நோக்கத்துக்கும் வேறுபாடாகவே 'றோ' அமைப்பு என்ன விதமான பங்கு வகித்து வந்திருந்தாலும் ஆயுதக் கடத்தலில் 'றோ'வுக்குச் சம்பந்தம் இருப்பதாக முதலமைச்சர் கருணாநிதி அறிக்கையின் விபரங்கள் புலனாய்வு வட்டாரங்களில் சந்தேகத்துக்கிடமானவையாகவே கருதப்படுகின்றன.

—இப்படி திரு. கே. என். அருண் 'சண்டேமெயில்' கட்டுரையில் எழுதியிருக்கிறார். (உ-எ)

### அவசரகாலச் சட்டம் நீடிப்பு

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை வியாழன் இரவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 115 வாக்குகளும் எதிராக 66 வாக்குகளும் கிடைத்தன. (உ-எ)

★ COMPUTER PROGRAMMING ★

Basic Programming Course இற்கான

புதிய பிரிவுகள்

28 - 02 - 1990 (Wed & Thu BATCH)

03 - 03 - 1990 (Sat & Sun BATCH)

9.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

IDP COMPUTER CENTRE

342, K.K.S. Road, Jaffna.

★ IDP மல்லாகம் கிளையில் 4.00 மணிக்கு புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

★ D - BASE III + பயில இருப்பவர்கள் முன்கூட்டியே உங்கள் பெயர்களை யாழ்நகர் அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்ளலாம்.

(சி-3910)

### மன்னார் பிரதேசசபை
## ஆதனவரி 1990

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (1) பிரிவின் கீழ் மன்னார் பிரதேச சபையின் மன்னார் பட்டின உப அலுவலகம், எருக்கலம்பிட்டி உப அலுவலகம், பேசாலை உப அலுவலகம், தலைமன்னார் உப அலுவலகம் ஆகிய நான்கு (4) உப அலுவலக நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு எட்டு வீதமானது (08%) முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்டெம்பர் 30, டிசம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு சமமான தவணைகளில் செலுத்தப்படற்பாலதான ஓர் ஆதனவரியை கடந்த வருடத்தில் விதிக்கப்பட்டது போல், 1990 ஆம் ஆண்டிற்கும் மன்னார் பிரதேச சபையானது விதித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அ. க. ஏனாதிநாதன்,
விசேட ஆணையாளர்.
மன்னார் பிரதேசசபை.

பிரதேசசபைச் செயலகம்,
மன்னார் பிரதேசசபை,
மன்னார். 1990.02.05.

(சி/3409)

### மன்னார் பிரதேசசபை
## ஆதனவரி நிரல் 1990

1987-ஆம் ஆண்டின் 15-ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ம் 141 (1) ம் பிரிவுகளின் கீழ் மன்னார் பிரதேச சபையின் மன்னார் பட்டினம், எருக்கலம்பிட்டி, பேசாலை, தலைமன்னார் ஆகிய நான்கு (04) உப அலுவலக நிர்வாக எல்லையுள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்த பெறுமதி மீளாயப்பட்ட புதிய வரி மதிப்பீட்டு நிரல் அவ்அவ் உப அலுவலக காரியாலயங்களில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

அ. க. ஏனாதிநாதன்,
விசேட ஆணையாளர்'
மன்னார் பிரதேச சபை.

பிரதேசசபைச் செயலகம்,
மன்னார் பிரதேசசபை,
மன்னார். 1990 - 02 - 05

(சி/3408)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. பரமசாமி கருணானந்தன்
(தொழில்நுட்பவியலாளர், பன்குளம்)


தோற்றம்: 30 - 1 - 1949 திதி: 25 - 2 - 1990 மறைவு: 10 - 3 - 1986

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

449, நாவலர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
(11844)

## ஆண்டொன்று சென்றாலும் உன் நினைவு சாகவில்லை



### கந்தையா யோகநாதன்
(யோகன்)

தோற்றம்: 03-11-1968 மறைவு: 06-02-1989

செந்தமிழின் துடிப்போடு
செழுந்தமிழர் பண்பையெல்லாம்
சுந்தரமாய்க் காத்திட்ட
சுகுணனே யோகநாதா!
உந்தனை நாம் மறப்போமோ?
உயர் பண்பின் சிகரமன்னாய்!
வந்தனை செய்திறைவன்
வளவடிகள் சுமந்தனையே!

உன்பிரிவால் ஆறாத்துயரில் நீறாகும் நெஞ்சங்கள்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
சகோதரிகள், சித்தப்பாமார்,
சின்னம்மாமார், மாமாமார், மாமிமார்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு.

(2632)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல் கட்டுபவரும்
கண்ணாடி தருபவரும்,



இளை: P. I. பர்னாண்டோ
292, (540) ஆஸ்பத்திரி வீதி,
(போதனா வைத்தியசாலை முன்புறம்)
யாழ்ப்பாணம்.

உதயன்

25 - 02 - 1990 ஞாயிற்றுக்கிழமை

கண்ணாடி கொடுப்பவரும்
பல் கட்டுபவரும்!



P. I. பர்னாண்டோ
247, பிரதான வீதி,
(டாக்டர் பிலிப்ஸ் வார்ட் முன்புறம்)
யாழ்ப்பாணம்.

# ஈழப்பிரச்சினை பற்றி ஆராய சர்வகட்சி மாநாடு கூட்டுக!

## கம்யூனிஸ்ட் பிரமுகர் கேட்கிறார்

சென்னை, பெப். 25

இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி ஆராய அனைத்து அரசியல் கட்சிகள் மாநாட்டைக் கூட்டு படி இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் திரு. ஆர். உமாநாத் முதலமைச்சர் கருணாநிதியைக் கேட்டிருக்கிறார்.

செய்தியாளர் மத்தியில் பேசுகையில் திரு. உமாநாத் சொன்னதாவது:-

பஞ்சாப், காஷ்மீர் பிரச்சினைகளைப்போன்று இலங்கைப் பிரச்சினையும் இந்தியாவின் தேசியப் பிரச்சினையாகும்.

ஆகவே தமிழ் அமைப்புக்களுடன் நடத்தும் பேச்சுக்களின்போது இடம்பெறும் முன்னேற்றம் மற்றும் விஷயங்களை மாநிலத்திலுள்ள ஏனைய அரசியல் கட்சிகளுக்கு முதலமைச்சர் அவ்வப்போது எடுத்துக் கூறவேண்டும்.

வடக்கு—கிழக்கு மாகாணத்துக்கு அதிகாரங்களை வழங்குவதன் மூலம் இலங்கைத் தமிழரின் பாதுகாப்புக்குத் தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இலங்கைஅரசை இந்தியா வற்புறுத்தவேண்டும்.

தமிழர் அமைப்புக்களிடையேயான சகோதர யுத்தம் நிறுத்தப்படவேண்டும்.

இலங்கை இறைமையுள்ள நாடு. ஆகவே அந்த நாடு கேட்டவுடன் இந்திய அமைதிப்படை வெளியேறியே ஆகவேண்டும்.

வடக்கு—கிழக்கு மாகாண சபைக் கலைப்பு தமிழர் அமைப்புக்களிடையேயான புரிந்துணர்வின் அடிப்படையில் மட்டுமே இடம்பெறவேண்டும்.

—இப்படி திரு. உமாநாத் தெரிவித்தார்.

### இந்திய கம்யூ.கட்சியும்

இதேவேளை இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண அனைத்துக்கட்சி மாநாட்டைக் கூட்டும்படி இந்திய கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. ராஜேஸ்வரராவும் தமிழக முதல்வரைக் கேட்டிருக்கிறார். (உ.எ)

# இந்திய இராணுவத்தை இராமநாதபுரம் அனுப்புக!

## பல அரசியல்கட்சிகள் வேண்டுகோள்

இராமநாதபுரம், பெப். 25

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இந்திய இராணுவம் அழைக்கப்படவேண்டும் என்று அரசியல் கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இது பற்றி அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிப்பதாவது:-

மண்டபம் முகாம் மற்றும் இராமநாதபுரத்தில் துப்பாக்கிகளுடன் பொலீஸார் நிறுத்தப்பட்டிருப்பது குறித்து அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

கெரில்லாப் பயிற்சி பெற்ற போராளிகளை எதிர்க்கவோ சமாளிக்கவோ தமிழகப் பொலீஸாரால் இயலாது.

ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்துக்கு இந்திய இராணுவம் அழைக்கப்பட வேண்டும் என்று அரசியல் கசிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

போராளிகள் இயந்திரத் துப்பாக்கிகளுடன் வந்தால் ஸ்டென் துப்பாக்கிகளை வைத்துக்கொண்டு அவர்களை எதிர்க்கலாம்.

ஆனால் கிரனேட்டுகளை போராளிகள் வீசினால் அதைப் பொலீஸாரால் சமாளிக்க முடியாத நிலை உருவாகி உயிர்ச்சேதம் அதிகமாகி விடும்.

எனவே, போராளிகளை எதிர்க்க இராணுவத்தினரால் மட்டுமே முடியும்.

—இப்படி அரசியல் கட்சிப் பிரமுகர்கள் தெரிவித்திருக்கின்றனர் என்று இராமேஸ்வரம் செய்தி ஒன்று தெரிவித்தது. (உ-எ-9)

# பயந்த நிலையில் வாழும் ராமேஸ்வரம் மக்கள்

இராமேஸ்வரம் பெப். 25

இராமேஸ்வரத்துக்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இராமநாதபுரம் பொலீஸ் நிலையத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து இந்த நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு நலனைக்கருதி சுற்றுலாப் பயணிகள் இராமநாதபுரம், மண்டபம் ஆகிய பகுதிகளுக்கு செல்லுவதைத் தவிர்த்து வருகின்றனர்.

குறிப்பாக, மண்டபம் மற்றும் இராமநாதபுரம் பகுதியில் உள்ளூர் மக்கள் இரவில் வெளியில் நடமாடுவதைத் தவிர்த்துவிட்டனர்.

குழக்கு இராமநாதபுரம் பகுதியில் உள்ள தியேட்டர்களுக்கு இரவுக்காட்சிகளுக்குச் செல்வோர் எண்ணிக்கையும் குறைந்து விட்டது.

வீதி ஓரங்களில் உள்ள வீடுகளில் வசிப்பவர்களில் பலர் இரவில் வீடுகளில் தங்குவதில்லை.

வீடுகளைப் பூட்டிவிட்டு விளக்குகளை அணைத்துவிட்டு அஞ்சியபடியே இருட்டில் தூங்குகின்றனர்.

—இப்படி இராமேஸ்வரம் பகுதியில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-9)

# பாதுகாப்பு படையினருக்கு எதிராக நடவடிக்கை !

கொழும்பு, பெப். 25

கம்பஹா [வாசி ஒருவர் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக வெலிக்கடை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த 3 பொலீஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை நுவரெலியாவில் வர்த்தகர் ஒருவரிடம் கப்பம் கேட்டதாகக் கூறப்படும் 6 இராணுவத்தினரும் கைது செய்யப்பட்டனர். (உ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25 – 02 – 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

★ வடபகுதியிலிருந்து

# மார்ச் முதல் வாரத்தில் முற்றாக படை வாபஸ்!

யாழ்ப்பாணம், பெப் 25

இந்தியப்படை தற்போது வட இலங்கையில் நிலைகொண்டுள்ள இடங்களில் இருந்து எதிர்பார்க்கப்பட்டதற்கு முன்கூட்டியே விலக்கிக் கொள்ளப்படும் எனத் தெரிய வருகிறது.

மார்ச் முதல் வாரத்தில் வடபகுதியிலிருந்து படைகளை முற்றாக விலக்கிக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இந்தியப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கிலிருந்து படைவிலகல் மார்ச் நடுப்பகுதியிலேயே முற்றுப்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

பலாலியில் உள்ள இந்திய அமைதிப்படையின் வடபகுதித் தலைமயகத்திற்கும் இந்தியப்படை நாடு திரும்ப பயன்படுத்தப்படும் காங்கேசன் துறைமுகத்திற்கும் பாதுகாப்பு வழங்கும் பொருட்டு தற்போது இந்த இடங்களைச் சூழ இந்தியப்படையினர் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அந்த அதிகாரி மேலும் சொன்னார். (உ-9)

## கண்டனம்

கொழும்பு, பெப் 25

பத்திரிகையாளர் ரிச்சர்ட் டீ சொய்சா கடத்தப்பட்டு கொல்லப்பட்டது குறித்து சர்வதேச பத்திரிகையாளர் நிறுவனம் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் ''ரிச்சர்ட் டீ சொய்சாவைக் கொன்றவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்''– என்று சர்வதேச பத்திரிகையாளர் சங்கத் தலைவர் கேட்டிருக்கிறார். (ஒ-எ)

## சித்திரக் கண்காட்சி

குருநகர், பெப், 25

''கவின்கலைகள் பயிலும்'' ஓவியப்பகுதி மாணவர்களின் சித்திரக்கண்காட்சி ஒன்று இன்று 25 ஆம் திகதி காலை 9– மணிக்கு யாழ் திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறும். (க-51)

## விபத்தில் பெண் காயம்

யாழ்ப்பாணம், பெப் 25

திருக்கேதீஸ்வரத்தில் இருந்து நேற்று பகல் யாழ்ப்பாணம் வந்த தனியார் பஸ் ஒன்று நாவற்குழிக்கு அண்மையில் குடைசாய்ந்ததில் ஒரு பெண் உட்பட இருவர் காயமடைந்தனர்.

மற்றைய ஒரு வாகனத்தை முந்திச் செல்ல முற்படுகையிலேலே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாகச் சொல்லப்யட்டது.

இதில் காயமடைந்த சோமசுந்தரம் புஸ்பராணி (வயது 23) யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-10)

## 'கலைமுகம்' அறிமுக விழா

குருநகர், பெப். 25

'கலைமுகம்' காலாண்டு கலை, இலக்கிய இதழின் அறிமுக விழா இன்று 25-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு எழுத்தாளர் சொக்கன் தலைமையில் யாழ்– திருமறைக்கலாமன்ற அரங்கில் நடைபெறும். (க-51)

## நாட்டுக்கூத்து நாளை

குருநகர், பெப், 25

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் 'நீ ஒரு பாறை' நாட்டுக்கூத்து நாளை திங்கட்கிழமை மாலை 6,30 மணிக்கு யாழ் [illegible] வீதி திருமறைக் கலாமன்றக் கலையரங்கில் நடைபெறும். [க-51]

# மார்புக்கு வெளியே இருதயம்: அதிசய குழந்தை இறந்தது!

சென்னை, பெப். 25

சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் நெஞ்சுக்கு வெளியே இருதயத்துடன் பிறந்த அதிசயக் குழந்தை அறுவைச் சிகிச்சை செய்த சிறிது நேரத்தில் இறந்து விட்டது.

அறுவைச் சிகிச்சை மூலம் விலா எலும்புகளை அழுத்தி இருதயத்தை விலா எலும்புகளுக்கு உள்பக்கத்தில் அதன் வழக்கமான இடத்தில் வைக்க டாக்டர்கள் முயற்சித்தனர். எனினும், முயற்சிக்குப் பலன் கிடைக்கவில்லை.

# எழுத்துச் சீர்திருத்தம் குறித்து ஆசிரியர் கருத்து திரட்டப்படும்

## கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 25

பாடசாலையில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அமுல்படுத்துவது குறித்து ஆசிரியர்களது அபிப்பிராயங்கள் திரட்டப்பட்டு அதன் விவரம் கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்படும்.

இவ்வாறு யாழ் மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தெரிவித்தார். நேற்று யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஆரிய திராவிடபாஷா அபிவிருத்திச் சங்கத்தின் ஆசிரியர் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார். (உ-10)

# வாகன வரி அனுமதிப்பத்திரம்; இலங்கை வங்கியில் கருமபீடம்

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ் - செயலக இறைவரித் திணைக்களத்தில் மோட்டார் வாகன 90 ஆம் ஆண்டுக்கான வரி அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கு யாழ். ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையிலேயே பணத்தைச் செலுத்த வேண்டும்.

இதற்கான கருமபீடம் ஒன்று ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கிக் கிளையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வரி அனுமதிப் பத்திரத்தைப் பெற விரும்புவோர் தமது வாகனத்துக்கு உரிய முக்கிய தஸ்தாவேஜுக்களை இறைவரித் திணைக்களத்தில் காண்பித்து இறைவரித் திணைக்கள அதிகாரிகளின் அனுமதியின் பின்பே பணத்தை வங்கியில் செலுத்த வேண்டும்.

வங்கியில் வழங்கப்படும் பற்றுச்சீட்டை இறைவரித் திணைக்களத்தில் சமர்ப்பித்து வரி அனுமதிப் பத்திரத்தைப் பெறவேண்டும்.

இதேவேளை கடந்த ஐந்து வருடங்களாக இயங்காதிருந்த இறைவரித் திணைக்களம் நாளை 26 ஆம் திகதி முதல் மீண்டும் இயங்க உள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

மனித உரிமை சம்பந்தமான

# ஜெனீவா மாநாட்டுக்கு சுதந்திரக்கட்சியின் பிரதிநிதி

கொழும்பு, பெப். 25

ஜெனிவாவில் தற்போது நடந்து கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக் கூட்டத்திற்கு சுதந்திரக் கட்சி தனது பிரதிநிதி ஒருவரை அனுப்ப இருக்கிறது.

இத்தகவலை சுதந்திரக் கட்சித் தலைவியும் எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதை சுதந்திரக் கட்சிப் பிரதிநிதி ஐ. நா. மனித உரிமை ஆணைக் குழுக் கூட்டத்தில் கொண்டு வருவார்.

இலங்கையில் அதிகரித்து வரும் மனித உரிமை மீறல் செயல்களைக் கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இலங்கைக்கு உதவி அளிக்கும் நாடுகள் நிபந்தனையும் விதிக்க வேண்டும்.

இப்படி திருமதி சிறிமாவோ கேட்டுக்கொண்டார். (ஒ-எ-9)

## கலைஞருடனான பேச்சு---

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றை நாம் ஏற்றுக் கொண்டோம்.

வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைக்க வேண்டும் அல்லது திரு. வரதராஜப் பெருமாள் தலைமையிலான தற்போதைய மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் ராஜினாமாச் செய்வதன் மூலம் புதிய தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் [illegible] கோரிக்கை தீவிரமாக பரி[illegible] ஒரு முக்கிய விஷயமாகும்.

இதை எமது முன்னணிப் பிரதிநிதிகள் திரு. கருணாநிதிக்கு எடுத்துச் சொன்னார்கள்.

முதலமைச்சர் கருணாநிதி எடுக்கும் முயற்சிகளை எமது முன்னணி வரவேற்கிறது' திரு. கருணாநிதி இது விஷயத்தில் மனதார முயற்சிக்கிறார் என்று முன்னணி நம்புகிறது.

தமிழர் அமைப்புக்கள் மீது முதலமைச்சர் ஒன்றையும் திணிக்கவில்லை.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திரு. சின்னத்தம்பி கந்தையா

(கொல்லங்கலட்டி)

(Retired Station Master & Attorney - At Low)

''சாந்தவாசா'' கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தையா 23-2-90 அன்று சிவபதம் அடைந்தார். இவர் முன்னைநாள் புகையிரத நிலைய அதிபரும், புகைவண்டிப்பகுதி ஊழியர் சங்கத் தலைவரும், சட்டத்தரணியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 24–2–90 சனிக்கிழமையன்று நடைபெற்றது. அவரது நண்பர்கள், சகாக்கள், உற்றாருக்குத் தனிப்பட்ட அறிவித்தல் தர முடியாமைக்கு வருந்துகிறேன்.

தகவல்:
திருமதி மகேஸ்வரி கந்தையா
(11911)

## திருமதி பூமணி கனகரெத்தினம்

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலாயுதம் கனகரெத்தினம் பத்தர் அவர்களின் அன்பு மனைவி பூமணி 24–02–1990 சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சபாபதிப் பத்தர் அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், பஞ்சாட்சரப் பத்தர் அவர்களின் அருமைச் சகோதரியும், நவநீதன், நவராணி, நவசக்தி (ஆசிரியை, நிக்கவெட்டவான முஸ்லீம் வித்தியாலயம், தம்புள்ளை), நவமலர் (யாழ். இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், விக்கினேஸ்வரி, கணேசராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், விஜயலட்சுமியின் அன்பு மைத்துனியும், கஜன், மயூரன், ராஜினி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 26–02–1990 திங்கட்கிழமை நண்பகல் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாச்சிமார் கோவிலடி. (11869) க. நவநீதன்

## திருமதி ஈஸ்வரி இராமனாதன்

[இளைப்பாறிய ஆசிரியை, Green Land College, Colombo]

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி ஈஸ்வரி இராமனாதன் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு. ஐ. இராமனாதன் [சேனாதிராசா] (Retired Manager Thinakaran, Proporietor Rameswary Advertising Service Colombo) அவர்களின் அன்பு மனைவியும், இராஜராஜேஸ்வரி, இராமேஸ்வரி (அநுஷா), மித்திரேஸ்வரி, கிருபாகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. ராஜகுலசிங்கம் (முன்னாள் உத்தியோகத்தர், Warner Lambert Lanka Ltd. – தற்போது Canada) என்பவரின் அன்பு மாமியாரும், பரணிதரன், கிருசாந்தி, ஹரிஹரன், நிரஞ்சனி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 26–02–1990 திங்கட்கிழமை காலை 10–00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இராஜகுலசிங்கம்
மடத்தடி லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
[11871]

## திரு. வேலுப்பிள்ளை குமாரசாமி

[இளைப்பாறிய அதிபர், அனலைதீவு]

அனலைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கனடாவில் வசித்தவருமான திரு. வே. குமாரசாமி 22-02-1990 இல் கனடாவிற் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான நெடுந்தீவு வேலுப்பிள்ளை (அதிபர்), அனலைதீவு விசாலாட்சி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அம்பலவாணர் (மலேயன் பென்சனியர்), சின்னாச்சி (கனடா) ஆகியோரின் மருமகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், லலிதாதேவி (கனடா), சறோஜினிதேவி (கனடா), நடேசன் (கனடா), வசந்தாதேவி (இலண்டன்), Dr. கிருபானந்தன் (கனடா), மகேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவானந்தன் (கனடா), Dr. சபாநாதன் (கனடா), பசுபதி (பொறியியலாளர், லண்டன்), கௌரி (கனடா), சந்திரகலா (கனடா), பரிமளா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திருமதி மனோன்மணி சிதம்பரப்பிள்ளை, சேதுகாவலர் (இளைப்பாறிய சிறாப்பர்), காலஞ்சென்ற துரைச்சாமி, குகதாசன் (ஆய வரி அறவிடுபவர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாருடைய ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

தகவல்:
அனலைதீவு. [11872]
வே. சேதுகாவலர்
வே. குகதாசன்